# பாபநாசம் சிவன் பாடல்களில்
# மோஹன இராக உருப்படிகளின் இசை அமைதி


ஆய்வாளர்

**கிறிஸ்டி வெரோணிக்கா ரா.**

**18MPMUF001**

ஆய்வு நெறியாளர்

**முனைவர் டாக்டர் வி.ஜனகமாயாதேவி**


ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்குரிய
பகுதி தேவைக்காக அளிக்கப்படும் ஆய்வேடு


**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்**
**மகளிர் உயர்கல்வி நிறுவனம்**

கோயமுத்தூர் - 641 043

**ஜுலை 2019**

# பாபநாசம் சிவன் பாடல்களில்
# மோஹன இராக உருப்படிகளின் இசை அமைதி


ஆய்வாளர்
கிறிஸ்டி வெரோணிக்கா ரா.
**18MPMUF001**

ஆய்வு நெறியாளர்
முனைவர் டாக்டர் வி.ஜனகமாயாதேவி


ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்குரிய
பகுதி தேவைக்காக அளிக்கப்படும் ஆய்வேடு


அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயமுத்தூர் - 641 043


ஆய்வு பணிக்காக சான்றளிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| இசைத்துறை தலைவர் கையொப்பம் | கலை மற்றும் சமூக அறிவியல் புல முதன்மையர் கையொப்பம் | ஆய்வு நெறியாளர் கையொப்பம் |

# ஆய்வு நெறியாளர் சான்றிதழ்

முனைவர். டாக்டர்.வி.ஜனகமாயா தேவி,
பேராசிரியர்.
இசைத்துறை.
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்.
கோயமுத்தூர் - 641 043.

"பாபநாசம் சிவன் பாடல்களில் மோஹன இராக உருப்படிகளின் இசை அமைதி" என்னும் தலைப்பில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக செல்வி. கிறிஸ்டி வெரோணிக்கா.ரா,அவர்கள் செய்துள்ள இந்த ஆய்வு அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவன இசைத்துறையில் என்னுடைய நெறிப்படுத்தலின் கீழ் அவரால் தன்னிச்சையாகச் செய்யபட்டதென்றும், இவ்வாய்வின் போது ஆய்வாளருக்கு வேறு எந்தப்பட்டமும் அளிக்கப்பெறவில்லையென்றும் நான் அறிந்த வரையில் இத்தலைப்பில் வேறு எவரும் ஆய்வு செய்யவில்லையென்றும் சான்றளிக்கின்றேன்.

இசைத்துறைத் தலைவர்

ஆய்வுநெறியாளர்

கலை மற்றும் சமூக அறிவியல்
புல முதன்மையர் கையொப்பம்

இடம் - கோயமுத்தூர்

நாள்- 31.07.2019

# ஆய்வாளர் உறுதிமொழி

**கிறிஸ்டி வெரோணிக்கா.ரா,**
ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்,
இசைத்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயமுத்தூர் - 641 043.

**“பாபநாசம் சிவன் பாடல்களில் மோஹன இராக உருப்படிகளின் இசை அமைதி”** என்னும் தலைப்பில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக செய்யப்பட்டுள்ள இந்த ஆய்வு என் சொந்த முயற்சியில் உருவானதேயாகும். இதற்கு முன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இந்த ஆய்வேடு அளிக்கப்பெறவில்லை என உறுதியளிக்கிறேன்

**ஆய்வாளர் கையொப்பம்** **ஆய்வு நெறியாளர் கையொப்பம்**

இடம் - கோயமுத்தூர்

நாள்- 31.07.2019

# நன்றியுரை

**“பாபநாசம் சிவன் பாடல்களில் மோஹன இராக உருப்படிகளின் இசை அமைதி”** என்ற இவ்வாய்வேடு அமையக் காரணமாக இருந்த வேந்தர்டாக்டர்.பி.ஆர். கிருஷ்ணகுமார் அவர்களுக்கு என் உள்ளம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இந்த கல்வி நிறுவனத்தில் கல்வி பயின்று இவ்வாய்வினை மேற்கொள்ள உதவியாக இருந்த துணைவேந்தர் முனைவர் பிரேமாவதி விஜயன் எம்.எஸ்.சி., எம்.எட்,, டிப்.எஸ்.பிஎல்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பிற்காக இக்கல்வி நிறுவனத்தில் சேர்ந்த நாள் முதல் என்னை ஊக்குவித்து இவ்வாய்வினை மேற்கொள்ள எனக்கு ஆர்வம் ஏற்படுத்திய கலை மற்றும் சமூக அறிவியல புல முதன்மையர் முனைவர் கே.டி.கீதா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள் பல.

எனது ஆய்வு பணி சிறப்புடன் அமைய என்னை ஊக்குவித்து முழு ஒத்துழைப்பு தந்து உதவிய இசைத்துறை தலைவர் (பொறுப்பு) முனைவர். ஏ.வி.ஸஜினி அவர்களுக்கு என் உள்ளம் நிறைந்த நன்றிகள்.

எனது ஆய்வின் தொடக்கம் முதல் இறுதி வரை என்னுடன் இருந்து, ஆய்விற்கு தேவையான ஆதரங்களையும், ஆக்கபூர்வமான சிந்தனைகளையும் கொடுத்து ஆய்விற்கு பெரும் உதவியாகவும் வழிகாட்டியாகவும் இருந்த எனது ஆய்வு நெறியாளரான முனைவர். வி.ஜனக மாய தேவி அவர்களுக்கு என் மனதார நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

இவ்வாய்விற்குத் துணைபுரிந்த எமது இசைத்துறை பேராசிரியர்கள் அனைவருக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

ஆய்விற்குத் தேவையான நூல்களைக் கொடுத்து உதவிய அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் தலைமை நூலகர் துணை நூலகர், உதவியாளர் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வேடு சிறப்பாக அமைவதற்கு அருள்புரிந்த இறைவனைப் போற்றி என் கோடான கோடி நன்றிகளை இறைவனடியில் சமர்ப்பிக்கிறேன்.

இவ்வாய்வேடு சிறப்பாக அமைய பல வகையிலும் என்னை உற்சாகப்படுத்தி உதவி புரிந்த என் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| இயல் - I | பாபநாசம் சிவனின் வாழ்க்கை வரலாறும் இசைத் தொண்டும் | 4 |
| இயல் - II | பாபநாசம் சிவனின் இசை உருப்படிகள் - ஒரு நோக்கு | 21 |
| இயல் - III | மோஹன இராக உருப்படிகளின் இசை அமைப்பு | 35 |
| இயல் - IV | மோஹன இராக உருப்படிகளின் இயல் அமைதி | 85 |
| | முடிவுரை | 101 |
| | துணைநூற்பட்டியல் | 102 |
| | பின்னிணைப்பு | 105 |

# முன்னுரை

காற்றினிலே வரும் கீதமானது, உள்ளத்தைத் தொட்டு உடல் முழுவதும் பரவி இன்பத்தை தர வல்லது. அப்படிப்பட்ட பாடல்களை இயற்றிய ஆன்றோர்கள் பலர் உள்ளனர். தமிழ், தெலுங்கு, மலையாளம், சமஸ்கிருதம், கன்னடம் என்று பல மொழிகளில் பாடல்கள் பலரால் இயற்றப்பட்டிருப்பினும், மொழிக்கு அப்பாற்பட்டு பல மொழிகளிலும் உள்ள பாடல்களைக் கற்று உணர்ந்து பாடிப்பரப்பும் இசை வல்லுநர்கள் ஏராளம்.

**“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்”** என்ற பாரதியாரின் கூற்றிற்கிணங்க தமிழ் மொழியில் பல உருப்படி வகைகளை இயற்றிய பாபநாசம் சிவன் பாடல்களில் ஒரு சில முத்துக்களை மட்டுமே எடுத்துக் கோர்த்து“பாபநாசம் சிவனின் மோஹன இராக உருப்படிகளின்இசை அமைதி” என்ற தலைப்பின் கீழ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

### ஆய்வின் தலைப்பு

பாபநாசம் சிவன்,எண்ணற்ற இராகங்களில் பல உருப்படிகள் உருவாக்கியுள்ளார். அவற்றில் மோஹன இராகத்தில் அமைக்கப்பட்ட உருப்படிகளை ஆய்விற்கு எடுக்கப்பட்டுள்ன. இந்த ஆய்வானது “பாபநாசம் சிவன் பாடல்களில் மோஹன இராக உருப்படிகளின் இசை அமைதி” என்ற தலைப்பிலே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஆய்வுப் பொருள்

சிவன், மோஹன இராகத்தில் உருவாக்கியுள்ள உருப்படிகளை மட்டும் நோக்கும் முறையில் “பாபநாசம் சிவன் பாடல்களில் மோஹன இராக உருப்படிகளின் இசை அமைதி” என்பதை ஆய்வு செய்வது ஆய்வுப் பொருளாக அமைந்துள்ளது.

### ஆய்வின் நோக்கம்

நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, பஜனைப் பாடல்கள், கதாகாலட்ஷேபம், நாட்டிய நாடகங்கள், திரை இசை என்று பல இடங்களில் கால் பதித்துள்ள மோஹன இராகம், பிற நாட்டு இசையிலும் கோலோச்சி விளங்குகிறது. எனவே அதில் தமிழ்த்யாகையா எனும் பாபநாசம் சிவனின் மோஹன இராக இசை உருப்படிகளை ஆராய்வதே ஆய்வின் நோக்கமாகும்.

### கருதுகோள்

ஒரு இராகத்தில் பாடலை அமைத்துப் பாடுவதற்கு சில இலக்கண விதிமுறைகள் கையாளப்படுகின்றன. அந்த இலக்கண முறைமைகளை மையமாகக் கொண்டு பாபநாசம் சிவனின் மோஹன இராக உருப்படிகளின்இயல், இசை அமைதியான இராகத்தின் லட்க்ஷணம், அதில் அமையப்பெரும் கமகம், ஸ்வர குறியீடு, பிராசம், உவமை போன்றவற்றை ஆய்வு செய்வதே கருதுகோளாகும்.

### ஆய்வின் எல்லை

பாபநாசம் சிவன் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட உருப்படிகளை பாடியுள்ளார். அவற்றில் கீர்த்தனை மாலை என்னும் ஏழு பாகங்களில் 556 உருப்படிகள் காணப்படுகின்றது. அந்த ஏழு பாகங்களில், மோஹன இராக உருப்படிகள் பத்தையும் எடுத்து அவற்றின் இயல், இசை அழகை விளக்கும் விதமாக இந்த ஆய்வின் எல்லை அமைந்துள்ளது.

### முதன்மை சான்றாதாரங்கள்

பாபநாசம் சிவன் அவர்களால் இயற்றப்பட்டு, இவரின் புதல்வியான ருக்மணி ரமணியால் ஏழு பாகங்களாக வெளியிடப்பட்ட “பரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்தனை மாலை” என்னும் நூலே முதன்மைச் சான்றாதாரங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### துணை சான்றாதாரங்கள்

பி.டி. செல்லத்துரை அவர்களின் ‘**தென்னக இசையியல்**’ பாபநாசம் சிவனின் ‘**எனது நினைவு கடல்**’, வி.பா.கா.சுந்தரனார் அவர்களின் ‘**பஞ்ச மரபு**’ என்னும் நூல்கள் துணை சான்றாதாரங்களாகும்.

### ஆய்வின் அணுகுமுறை

“**பாபநாசம் சிவன் பாடல்களில் மோஹன இராக உருப்படிகளின் இசை அமைதி**” என்ற தலைப்பின் கீழ் ஆராயும் போது, சிவனின் வாழ்க்கை வரலாறு பற்றிய குறிப்பினைத் தருவதால் வரலாற்று முறை ஆய்வாகவும், அவரின் பாடல்கள் அனைத்தையும் பட்டியலிட்டு ஆராய்வதால் பகுப்பு முறை ஆராய்ச்சியாகவும் மோஹனஇராக உருப்படிகளின் இயல், இசை அழகை எடுத்து விளக்குவதால் விரிவாக்கமுறை ஆராய்ச்சியாகவும் இந்த ஆய்வு அமைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பகுப்பு**

ஆய்வேடானது முன்னுரை, முடிவுரை இல்லாமல் நான்கு இயல்களாக பகுக்கப்பட்டுள்ளது.

இயல் I - பாபநாசம் சிவனின் வாழ்க்கை வரலாறும் இசைத் தொண்டும்

இயல் II - பாபநாசம் சிவனின் இசை உருப்படிகள் - ஒரு நோக்கு

இயல் III - மோஹன இராக உருப்படிகளின் இசை அமைப்பு

இயல் IV - மோஹன இராக உருப்படிகளின் இயல் அமைதி

**இயல் I - பாபநாசம் சிவனின் வாழ்க்கை வரலாறும் இசைத் தொண்டும்**

பாபாநாசம் சிவனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் அவரது வாழ்க்கையில் இசையின் பங்கையும், இசைக்காற்றிய தொண்டுகள் பற்றியும் இந்த இயலில் விளக்கப்பட்டுள்ளது.

**இயல் II - பாபநாசம் சிவனின் இசை உருப்படிகள்- ஒரு நோக்கு**

ஏழு பாகங்களாக வெளியிடப்பட்டுள்ள"**ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை**" என்னும் நூலில் உள்ள பாடல்களின் எண்ணிக்கைப் பற்றிய பட்டியலும், ஒரு சில பாடல்களின் பொருளழகும் பற்றி இந்த இயலில் கூறப்பட்டுள்ளது.

**இயல் III - மோஹன இராக உருப்படிகளின் இசை அமைப்பு**

மோஹன இராகத்தில் அமைந்துள்ள பத்து உருப்படிகளின் த்ரயோதச லட்க்ஷணம், தசவித கமகம், இராகசஞ்சாரம் மற்றும் ஸ்வராக்ஷரம் பற்றியும், மோஹன இராகத்தின் லட்க்ஷணம் பற்றியும் ஆராய்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

**இயல் IV - மோஹன இராக உருப்படிகளின் இயல் அமைதி**

மோஹன இராகத்தில் அமைந்துள்ள இயல் அமைதியான பிராசம், வாக்கேயக்காரர் முத்திரை, இராகமுத்திரை, உவமை, மணிப்பிரவாளம் போன்றவற்றை பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நூற்பட்டியலும், பிற்சேர்க்கையாக பாபநாசம் சிவனின் ஒரு சில புகைப்படங்களும் இணைக்கப்பட்டுள்ளது.

# இயல் - I

## பாபநாசம் சிவனின் வாழ்க்கை வரலாறும் இசைத் தொண்டும்

முன்னுரை

1.1 பிறப்பு

1.2 சிவனின் குடும்ப விவரம்

1.2.1 வம்சாவளிகள்

1.3 சிவனின் இசை ஆசிரியர்கள்

1.3.1 தாய் (யோகாம்பாள்)

1.3.2 நூரணி மகாதேவ பாகவதர்

1.3.3 கோனேரி ராஜபுரம் வைத்யநாதய்யர்

1.3.4 நீலகண்ட சிவன்

1.4 பஜனை

1.5 சிவனின் முதல் பாடல் மற்றும் முதல் கச்சேரி

1.5.1 சிவனின் முதல் பாடல்

1.5.2 சிவனின் முதல் முழுக்கச்சேரி

1.6 வாக்கேயகாரர்

1.7 சிவனின் படைப்புகள்

1.8 ஆசிரியர்

1.9 பாபநாசம் சிவனும் நீலகண்ட சிவனும்

1.10 பாபநாசம் சிவன் என்ற பட்டம்

1.11 தமிழ் த்யாகையா

1.12 சிவனின் தேச பற்றும் அரசியல் பற்றும்

1.13 சிவனிடம் பாடல் கற்றுக் கொண்டவர்கள்

1.13.1 நேரடியாக கற்ற சில பிரபல இசை விற்பன்னர்கள்

1.14 சிவனின் திரை அனுபவம்

1.14.1 நடிப்பு

1.14.2 நடித்த சில திரைப்படம்

1.14.3 சினிமாவில் இசை அமைப்பு

1.14.4 பிரபலமான பாடல்கள்

1.14.5 திரைப்படத்திற்காக சிவனிடம் கற்றவர்கள்

1.14.6 சிவனின் திறமையை அறிந்து பாராட்டியவர்கள்

1.15 பொதிகை டிவியில் பாபநாசம் சிவன் பற்றி பேசியவர்கள்

1.15.1 திருலால்குடி ஜெயராமன்

1.15.2 திரு சங்கர மேனன்

1.16 பெற்ற விருதுகள்

1.17 மறைவு

முடிவுரை

# இயல் - I

## பாபநாசம் சிவனின் வாழ்க்கை வரலாறும் இசைத் தொண்டும்

### முன்னுரை

**'தோன்றின் புகழோடு தோன்றுக'** என்ற வாக்கிற்கிணங்க புகழோடு வாழ்ந்து மறைந்த ஆன்றோர் பலர் உள்ளனர். அவர்களுள் பாபநாசம் சிவனும் ஒருவராவார். பாட்டை எழுதுவதோடு மட்டும் அல்லாமல், இசை வடிவம் கொடுக்கும் வாக்கேயக்காரராகவும், பாடக்கூடிய திறமை பெற்ற நல்ல குரல் வளம் மிக்க பாடகராகவும், சொற்சுவையையும், இசைச்சுவையையும் உன்னதமாக, மக்களிடம் சென்றடையச் செய்யும் நடிப்பாற்றல் மிக்கவராகவும், இசை உலகின் உச்சாணிக்கொம்பில் கொடிகட்டிப் பறந்த பல பாடகர்களுக்கு பாடல்கள் கற்று கொடுத்த ஆசிரியராகவும், இறைவனுக்கே அடிமையென்னும் தத்துவத்தை விளக்கும் வண்ணம் வீதிவிதியாக பஜனைகளைப்பாடி வந்த ஆன்மீகவாதியாகவும்,**'ஆட்டு வித்தால் ஆரொருவர் ஆடாதாரே'** என்பதற்கிணங்க பல நாட்டிய நாடகமும் நாட்டிய பாடல்களும் பாடி ஆட்டுவித்தவராகவும், பன்முக வடிவம் பெற்று புகழும் மரியாதையும் ஒருங்கே பெற்ற பாபநாசம் சிவனின் வாழ்க்கை நமகெல்லாம் ஒரு பாடமாகவே அமைந்துள்ளது என்பது எள்ளளவும் ஐயமில்லை. பாபநாச சிவனின் வாழ்க்கையையும் இசை தொண்டையும் இவ்வியலில் காணலாம்.

### 1.1 பிறப்பு


தரணி புகழ் தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் தாலுக்காவில் போலோகம் என்ற கிராமத்தில் 26.9.1890 ஆம் ஆண்டு இராமாம்ருதையர், யோகாம்பாள் தம்பதியருக்கு பாபநாசம் சிவன் (சிவன்) அவர்கள் இரண்டாவது மகனாகப் பிறந்தார்[1].

### 1.2 சிவனின் குடும்ப விவரம்

பாபநாசம் சிவன், லட்சுமி அம்மாள் என்பவரை 1917 ஆம் ஆண்டு தனது 27 ஆம் வயதில் திருமணம் செய்து கொண்டார்[2]. அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைக்கு இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தனர்.

#### 1.2.1 வம்சாவளிகள்

சிவனின் தமயனாருக்கும் குழந்தைகள் உண்டு. பாபநாசம் சிவனின் வம்சாவளி பற்றி கீழே காண்போம்




### 1.3 சிவனின் இசை ஆசிரியர்கள்

இசையில் நல்ல தேர்ச்சி பெற சிறந்த குரு தேவை. அவ்வகையில் சிவனுக்கு இசைஞானத்தை ஊட்டிய குருக்களைப் பற்றி இவண் காண்போம்.

#### 1.3.1. தாய் (யோகாம்பாள்)

சிவனின் முதல் குருவானவர் அவருடைய தாயே[3]. 1899 ஆம் ஆண்டு தன் தாய் தமயனுடன் திருவனந்தபுரத்தை அடைந்தார். தாய் அவர்கள் சிவனுக்கு இசைப்பயிற்சி கொடுத்ததோடு மட்டுமல்லாமல் நன்கு ஊக்குவித்து, இசையின் ஆரம்பப்பாடல்களை கற்றுக் கொடுத்தார்.

#### 1.3.2.நூரணி மகாதேவ பாகவதர்

ஆரம்பப் பயிற்சியை தாயிடம் பெற்ற சிவன், தாய்க்கு பின் நூரணி பரமேஸ்வர பாகவதரின் புதல்வன் நூரணி மகாதேவ பாகவதரிடம் கர்நாடக இசையின் ஆரம்ப பாடமான சரளி வரிசை, அலங்காரம், கீதம் ஆகியவற்றை கற்றார். இதனால் இசையில் நல்ல தேர்ச்சி பெற்றவரானார்.

இசையில் நல்ல ஒரு ஞானம் கைவரப்பட்டதினால் தனக்கென்று மேலும் இசையில் தேர்ச்சி பெற குருவைத் தேடும் உந்துதலுக்கு ஆட்பட்டார்.

### 1.3.3 கோனேரி ராஜபுரம் வைத்யநாதய்யர்

சிவன், கோனேரிராஜபுரம் வைத்யநாதய்யர் அவர்களின் இசைக் கச்சேரிகளை பல இடங்களில் கேட்கும் பாக்கியம் பெற்றார். அன்னாருடைய இசை இவரை பெரிதும் கவர்ந்தது. இறைவனைத் தேடி ஓடும் பக்தனைப் போல் கோனேரிராஜபுரம் வைத்யநாதய்யர் அவரிடம் சென்று தன்னை சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொண்டார்.

கோனேரி ராஜபுரம் வைத்யநாதய்யர் சிவனை மாணாக்கராக ஏற்றுக் கொண்ட பின் தான் செல்லும் இசைக் கச்சேரிகளுக்கெல்லாம் உடன் அழைத்துச் சென்றார். இதனால் கச்சேரி எவ்வாறு செய்யவேண்டும், பார்வையாளர்களுக்கு தேவையானபடி எவ்வாறு பாடல்களைத் தேர்வு செய்ய வேண்டும், எந்த விகிதத்தில் மனோதர்மம், இராக ஆலாபனை, கல்பனாஸ்வரம், நிரவல் முதலியவற்றை பாடவேண்டும் போன்ற ஞானங்களை கைவரப்பெற்றார்.

சிவன், கோனேரிராஜபுரம் வைத்யநாதய்யரிடம் பல வாக்கேயகாரர்களின் கிருதிகளை கற்றுக் கொண்டார். இதனால் கிருதிப்பாடும் முறை மட்டுமின்றி பல இராகங்களை பற்றிய பரிச்சியமும் கைவரப்பெற்றார்.

### 1.3.4 நீலகண்ட சிவன்

1902 மற்றும் 1903 ஆம் ஆண்டுகளில் நீலகண்ட சிவனை தரிசித்த பாபநாசம் சிவன் அவர்கள் நீலகண்ட சிவன் ஏற்படுத்திய பஜனை முறையை பின்பற்றி வந்தார்[4]. பின் அவரது சிஷ்யர்களுடன் சேர்ந்து சிவ பஜனையும் செய்து வந்தார். நீலகண்ட சிவனின் பாடல்களில் பெரிதும் கவரப்பட்டவராய் '**என்றைக்கு சிவக்கிருவை (முகாரி), நவசந்தி பெற்றாலும் (கரஹரப்ரியா), இகபரம் (கமாஸ்)**' போன்ற பல பாடல்களை பஜனையில் பாடி வந்தார். நீல கண்ட சிவனிடமிருந்து விருத்தங்களையும் கற்றுத் தெரிந்தார்.

## 1.4 பஜனை

பாபநாசம் சிவன் பஜனையில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். அந்த ஈடுபாட்டின் காரணமாக பல எண்ணற்ற இசை உருப்படிகளை இயற்றினார். தென்னிந்தியாவில் நடைப்பெரும் பல உற்சவங்களில் சிவன், பஜனை கோஷ்டியை வழிநடத்திச் சென்றார்.

ஒரு சமயம் மதுரை சித்திரை திருவிழாவின் போது பிரசித்தி பெற்ற நாதஸ்வர வித்வான் மன்னார்குடி சின்னப்பக்கரி வந்திருந்தார். அப்போது சிவன் பஜனைகோஷ்டியை வழிநடத்தி செல்லும் விதத்தையும் அவரின் இசையில் மக்கள் ஈடுபாடு கொண்டிருப்பதையும் கண்டு சிவனின் இசையில் மிகவும் கவரப்பட்டவராய் அவரை வணங்கினார். மேலும் திருவையாறு உற்சவத்தில் ஏழு ஊர்களுக்கும் நடந்து சென்று எல்லா கோயில்களிலும், கோயிலில் குடியிருக்கும் தெய்வங்களை பற்றி சிறப்புடன் பஜனை பாடுவார். இதன் மூலம் சிவன் கோயிலில் பாடுகிறார் என்றவுடனே மக்கள் கூட்டம் திரண்டு வந்து சிவனின் பஜனையைப் கேட்பதுமட்டுமல்லாமல், பாடலை ரசித்து சிவனை மனதாரப் பாராட்டிச் செல்வர்.

## 1.5 சிவனின் முதல் பாடல் மற்றும் முதல் கச்சேரி

### 1.5.1 சிவனின் முதல் பாடல்

1918 ஆம் ஆண்டு நடந்த திருவையாறு தியாகராஜ ஆராதனையில் பாபநாசம் சிவன் தனது முதல் மேடையேறும் அனுபவத்தை பெற்றார். வெங்கட்ராமையர் வயலினும், அழக நம்பியாப்பிள்ளை மிருதங்கமும் வாசிக்க‘**குந்தலவராளி ராகத்தில்**’‘**உன்னை துதிக்க அருள்தா**’ என்ற ஆதி தாளத்தில் அமைந்துள்ள பாடலை பக்திப்பரவசத்துடன் பாடினார். அச்சமயத்திலிருந்து இந்தியா முழுவதிலும் பல இசை நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்[5].

### 1.5.2 சிவனின் முதல் முழுக்கச்சேரி

1923 ஆம் ஆண்டு பாப்பா வெங்கட்ராமைய்யர் பிடில் வாசிக்க, தஞ்சாவூர் வைத்யநாதைய்யரின் மிருதங்கத்துடன் மூன்று மணி நேரம் திருவையாறு தியாகராஜ உற்சவத்தில் சிவன் தனது முதல் முழுக்கச்சேரியை நிகழ்த்தினார். அக்கச்சேரியை அநேக பார்வையாளர்கள் கேட்டு மனம் நெகிழ்ந்து சிவனை பாராட்டிச் சென்றனர். இவ்வாறு சிவனின் முழுத்திறமையும் வெளிவந்தது. மக்கள் அனைவரும் சிவனை பாராட்டிக் கொண்டிருக்கும் அவ்வேளையில் நாராயணசாமி ஐயர், சிவனின் கச்சேரியை கேட்டு பூரிப்புடன் ‘‘சிவனாம் ஒருவர், காம்போதி ராகத்தில் எவ்வளவு பிரமாதமாக பாடிவிட்டார்” என்று பாராட்டினார். இக்கச்சேரி முதற்கொண்டு பல பட்டங்களையும் பல விருதுகளையும் பெற்று கௌரவிக்கப்பட்டார்[6].

## 1.6 வாக்கேயக்காரர்

பாபநாசம் சிவன் பனிமொழிப் புலவராகவும், அறிஞராகவும், கவிஞராகவும், சங்கீத வித்வானாகவும் விளங்கிய பெருமை மிக்கவராவார். இவர் ஒரு சிறந்த வாக்கேயங்க்காரரும் ஆவார். சிவன் இயற்றிய ஒவ்வொரு பாடலிலும் இசையமைந்த விதம் அனைவரின் மனதையும் தொடும் வண்ணம் சிறப்புடன் அமைந்திருக்கும். ஒவ்வொரு பாடல்களை கேட்கும் பொழுதும், பாடும் பொழுதும் நம்மை மறந்து பக்திரசத்துடன் பாடக்கூடியதாக விளங்குகிறது.

ஒருமுறை கபாலீஸ்வரர் கோவிலில் திருவிழா நடக்கும் சமயத்தில், கபாலீஸ்வரர் பூரணஅலங்காரத்துடன் கோவில் வளாகத்தை சுற்றி வரும் போது சிவன், உடனடியாக '**காம்போதி ராகத்தில் காணக்கண்கோடி வேண்டும்**' என்ற பாடலைப் பாடினார்.

ராமநாதபுரம் கிருஷ்ணன், நவராத்ரி விழாவின் போது சிவனை நோக்கி "நின்னுவினா" என்றதியாகராஜ கீர்த்தனையை பாடச்சொல்லி கேட்க, பாடுவார் என எல்லோரும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த நிலையில் "**நான் ஒரு விளையாட்டு பொம்மையா**" என்ற "**நவரச கானடா**" இராகத்தில் அமைந்த பாடலை உடனே பாடினார்.

சிவன் அவர்கள் திருவாரூரில் உள்ள வாதாபி கணபதி கோயிலிற்கு சென்று பின் அதன் நினைவாவே இருந்து இரவு பன்னிரண்டு மணியளவில் தனது மகள் ருக்மணிரமணியை அழைத்து உடனே '**ஸ்ரீ வாதாபி**' என்ற பாடலை சொல்லச் சொல்ல எழுதச் சொன்னார். இதன் மூலம் இசையின் மீதும், தெய்வத்தின் மீதும் எவ்வளவு பற்றுள்ளவராய் இருந்துள்ளார் என்பது புலனாகிறது.

சிவனின் படைப்புகளில் '**காணவேண்டாமோ (ஸ்ரீ ரஞ்சனி), இனி ஒரு கணம் (ஸ்ரீ ரஞ்சனி), சரவணபவ (சண்முகப்ரியா), உன்னையல்லால் (கல்யாணி), கற்பகமே கடைக்கண் பாராய் (மத்யமாவதி), காவாவா (வராளி)**' போன்ற இன்னும் பல பாடல்கள் பிரபலமடைந்த பாடல்களாகும்.

### 1.7 சிவனின் படைப்புகள்

பாபநாசம் சிவன் திரைப்பட பாடல்களையும் சேர்த்து சுமார் 2000 பாடல்களை இயற்றியும், பாடியுமுள்ளார். அதனுள் 50 சமஸ்கிருத பாடல்களும் அடங்கும். சிவன் அவர்கள் இயற்றிய **பதவர்ணம், தானவர்ணம், கீர்தனைகள், பதம், ஜாவளி, தில்லானா** போன்ற எல்லா வகைப்பாடல்களும் மிகவும் சிறப்புடையதாக அமைந்துள்ளது. **கணபதி, முருகன், லட்சுமி, சக்தி, சரஸ்வதி, திருமால், கற்பகாம்பாள், காபலீஸ்வரர்** போன்ற பல தெய்வங்கள் மீதும் **காந்தி, ராஜாஜி, சுபாஷ்சந்திரபோஸ்,வல்லபாய்படேல், பாரதி, வ.உ.சிதம்பரனார், சுந்தரர்**போன்ற பல தேசத்தியாகிகள் பற்றியும் நமது பாரத

நாட்டை பற்றியும் பல பாடல்கள் இயற்றியுள்ளார். மேலும் திரைப்படத்திலும் எண்ணற்ற பாடல்களை பாடியும், நடித்தும், கர்நாடக சங்கீதத்தை திரைப்படத்தில் உட்புகுத்தி சிறப்படையவும் செய்துள்ளார். சிவனின் படைப்புகள் யாவும் இராகபாவத்துடனும், எளிமையான சாஷித்யங்களுடனும்,மிகவும் சொழிப்பானதாகவும், புலமை வாய்ந்ததாவும், உணரச்சி பூர்வமானதாகவும் அமைந்துள்ளது.

### 1.8 ஆசிரியர்

பஜனை நடத்தி செல்வதிலும் இறைவன் புகழ் பாடுவதிலும் பல கச்சேரிகள்பாடுவதிலுமே லயித்திருந்த சிவன், மதுரையில் பிறந்தவரும், புகழ் பெற்ற நடனக் கலைஞராகவும் கலாச்சேத்ரா என்ற நடன பள்ளியை நிறுவியருமான **ருக்மணி தேவி அருண்டேல்** அவர்களின் வேண்டுகோளின்படி 1934 முதல் 1939 ஆம் ஆண்டு வரையிலும் அடையாரில் உள்ள செண்ட் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றினார்[7].

### 1.9 பாபநாசம் சிவனும் நீல கண்ட சிவனும்

நீலகண்ட சிவன் இசையுலகில் புகழ் பெற்ற வாக்கேயக்காரர். அதுபோலவே பாபாநாசம் சிவனும் புகழ் பெற்ற வாக்கேயகாரர் ஆவார். இருவருமே இடத்திற்கு இடம் பெயர்ந்து சிவன் என்னும் பெயரில் இசையை கற்றறிந்தார்கள். நீலகண்ட சிவன் வடிவீஸ்வரத்தில் பிறந்து பத்மநாபபுரம் நகர்ந்து திருகோவிலில் வீற்றிருக்கும் சுவாமி நீலகண்டசிவனை தரிசித்தார். பாபநாசம் சிவன் போலோகத்தில பிறந்து பாபநாசத்திற்கு இடம் பெயர்ந்து சிவ பஜனை செய்தார். இருவருமே முதன்முதலாக தன் தாயிடமே இசையைக் கற்றார். பக்தியின் அடிப்படையில் இருவரும் பல கீர்தனைகள் படைத்தனர். மேலும் புலித்தோல், ருத்ராட்ஷம், விபூதி என்ற மூன்றும் அணிந்த காட்சியுடன் இருவர் வாழ்விலும் பஜனை சாம்ராஜ்யமே முதன்மையாக இருந்துள்ளதை அறிய முடிகிறது. நீல கண்ட சிவன் சாவித்திரி புராணம் படைத்தார். பாபநாசம் சிவன் ஆண்டாள் சரித்திரத்தை இசை நாடகமாக்கி வெளியிட்டார். நீலகண்ட சிவன் படைப்புகளில் ஆன்மீகம், அறிவு நெறி, வாழ்க்கை நெறி போன்ற உபதேசங்களுடன் படைக்கப்பட்டது போலவே சிவனின் பாடல்களும் ஒத்த கொள்கையைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 1.10 பாபநாசம் சிவன் என்ற பட்டம்

1910 ஆம் ஆண்டு சிவனின் இருபதாம் வயதில் தன் தாயை இழந்த பின்பு ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகளாக ஊர்ஊராகச் சென்று பக்திப்பாடல்களைப் பாடி வந்தார்.[8] உடம்பில் விபூதி பூசிக்கொண்டு சிவனைப் பற்றியே பாடிக்கொண்டிருந்ததால்

‘‘**சிவன்**’’ என மக்களால் அழைக்கப்பட்டார். பின்பு தன்னுடைய மூத்த சகோதரனான இராஜகோபாலய்யர் வசித்து வந்த பாபநாசத்திற்கு வந்து அங்கேயே தங்கி பஜனை நிகழ்ச்சிகளை நிகழ்த்தி வந்தார். அச்சமயத்தில் கணபதி அக்ரஷாரத்தை சார்ந்த சாம்ப சிவஜயரால் ‘‘**பாபாநாசம் சிவன்**’’ என்று அழைக்கப்பட்டு அதன் பின்னர் எல்லோராலும் பாபநாசம் சிவன் என்று அழைக்கப்பட்டார்.

### 1.11 தமிழ் த்யாகையா

‘‘**தமிழ் த்யாகையா**’’ என்ற பெருமைக்குரிய பட்டம் கொண்டவர் நமது பாபநாசம் சிவன்.

1918 ஆம் ஆண்டு திருவையாரு த்யாகராஜ உற்சவத்தின் போது ‘**உன்னை துதிக்க அருள்தா**’ என்ற குந்தளவராளி இராகப்பாடலை பஜனையில் பாடியதை கேட்டு சமிலி சந்தரம் ஐயா தன்னை மறந்து ஓ தமிழ் த்யாகையா உதித்துவிட்டார் என உரத்த சத்தமிட்டு கூறினார். சிவனின் ரசிகர்கள் த்யாகராஜரின் மற்றொரு அவதாரம் தான் சிவன் என கூறிக்கொண்டனர். பக்தியிலும், பாடல் அமைத்து பாடுவதிலும் சிவன் அவர்கள் தியாகராஜரை போலவே காணப்பட்டார்.

### 1.12 சிவனின் தேசப்பற்றும் அரசியல் பற்றும்

பாபநாசம் சிவம், நமது இந்திய தேசத்தின் மீது பெரும் பக்தியும் பதிப்பும் கொண்டவர். ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்த தினத்திற்கு நாடெங்கும் சத்யாக்ரகம் நடந்து கொண்டிருந்த வேளையில் தேரடியில் பிரங்கம் செய்து தனது நாட்டுப்பற்றை வெளிக்காட்டினார். தேசத்தந்தை என அனைவராலும் அழைக்கக்கூடிய மகாத்மா காந்தியிடம் பேரன்பும், அவருடைய இயக்கத்தில் தீவர பற்றும் உடையவாகத் திகழ்ந்த சிவன் அவர்கள், காந்தியக் கொள்கையை மையமாகக் கொண்டு பல பாடல்கள் புனைந்தவர். காந்தியின் மீது கொண்ட அந்த உணர்வே ‘**த்யாகபூமியில்**’ சம்புஸாஸ்திரியாக வேடம் அணிந்து நடிக்கும் போது வெளிப்பட்டது. மேலும் மகாத்மா காந்தி இறந்த அன்று நீரும் அருந்தாமல் வானொலியில் ஒலிப்பரப்பாகும் காந்தியைப்பற்றியசெய்திகளை கேட்டு கண்ணீருடன் அமர்ந்துவிட்டார்.

இசையுலகில் மட்டுமல்லாமல் அரசியல் வாழ்விலும் ஆர்வம் கொண்ட சிவன், ஒரு சிறந்த காங்கிரஸ்வாதி மற்றும் காந்தியவாதியுமாவார். காங்கிரஸ் மீது கொண்ட ஈடுபாட்டின் காரணமாக தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து காங்கிரஸ் கூட்டத்திற்கும் தவறாமல் சென்று தேசியகீதம் பாடுவார். திரு.வி.க. இயற்றிய ‘‘மலைகளிலே உயர் மலையே’’ என்ற பாடலை காங்கிரஸ் தலைவர்கள்

முன்னிலையில் அடிக்கடி பாடி அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவார். ஆன்மீகத்தில் பக்தி கொண்ட ஒரு வாக்கேயகாரர் அரசியல் கலைஞராக பயணம் செய்தார் என்றால் அது சிவன் ஒருவரே.

காந்தியை பற்றியும் பாரதத்தைப் பற்றியும் எழுதிய பாடல்களில் சிலவற்றை கீழே காண்போம்.

| **பாடல்** | **இராகம்** | **தாளம்** |
|---|---|---|
| மகாத்மா ஒருவரே | மணிரங்கு | ஆதி |
| போர் பந்தர் | பலஹம்ஸ் | ஆதி |
| காந்தியாய்வந்தவதரித்த | ஹம்ஸத்வனி | ஆதி |
| கைமாறுசெய்வதுண்டோ | கேதாரகௌளை | ஆதி |
| அன்னையின் காலில் | செஞ்சுருட்டி | ஆதி |
| பாரத புண்ய பூமி | குந்தளவராளி | ஆதி |
| மஹாத்மா ஒருவரே | மணிரங்கு | ஆதி |
| நம்நாடு | சுத்த சாவேரி | ஆதி |
| பாரதமாதபரிபூர்ண | நடபைரவி | ஆதி |
| தாயின் மணிக்கொடி | சாளகபைரவி | ஆதி |

புகழ் பெற்ற தலைவர்களான ஊ.ளு.கிருஷ்ணையர் மற்றும் சத்தியமூர்த்தி அவர்கள் கூட்டம் ஒன்றில் சிவனை பாட அழைத்தனர். அங்கு வணக்கபாடலாக **'காந்தியை போலொரு சாந்தி ஸ்வருபனே'** என்ற பாடலை பாடினார்.

### 1.13 சிவனிடம் பாடல் கற்றுக் கொண்டவர்கள்

பாபநாசம் சிவனின் சீடன் என்ற வகையில் குருகுலவாசம் செய்து பூரணமாக அவரிடம் கற்றவர் எஸ்.எஸ்.மணிஅய்யர் ஒருவரே.

லால்குடீ ஜெயராமன அவர்கள் மிக பண்பும் பக்தியும் கொண்டவராய் '**ஸ்ரீ வாதாபி கணபதி,என்ன தவம்**' போன்ற பாடல்களை அவரிடமே கற்றுத் தெரிந்தார்.

செம்மங்குடி அய்யர் தான் வசித்த திருவனந்தபுரத்திற்கு சிவனை அழைத்து தம்முடனே வைத்துக் கொண்டு வாரம் ஒரு பாடலை ஸ்வரப்படுத்தி கல்கியில் வெளியிட்டார்.

### 1.13.1 நேரடியாகக் கற்ற சில பிரபல இசை விற்பன்னர்கள்

- ஸ்ரீமதி டி.கே.பட்டம்மாள்
- மதுரை மணி அய்யர்
- டி.கே.ஜெயராமன்
- எஸ்.ராமநாதன்
- எம்.எஸ்.சுப்புலட்சமி
- துறையூர் ராஜகோபால சர்மா
- மருத்துவகுடி கோபு

இவ்வாறு இசையுலகில் கொடிகட்டி பறந்தவர்கள் சிவனிடம் நேரடியாக பாடம் கற்றது நோக்கதற்குரியது. சிவனின் பாடல்களில் பொதிந்துள்ள கருத்தாழமும் அதற்கு ஒத்த இசையமைப்புமே அவருடைய காலத்திலேயே சிவனின் பாடல்கள் பிரபலமாவதற்கு காரணமாயிற்று.

## 1.14 சிவனின் திரை அனுபவம்

சிவன் அவர்கள் கால் பதிக்காத இடமே இல்லை என்று கூறும் வகையில் திரைத் துறையிலும் உட்புகுந்து தன் கைவண்ணத்தை காட்டியுள்ளார். சினிமாவில் பாடல் பாடியது மட்டுமின்றி சிறப்புற நடித்துமிருக்கிறார். அந்த அனுபவங்களை பற்றி நாம் விரிவாக காண்போம்.

### 1.14.1 நடிப்பு

1935 ஆம் ஆண்டு முதல் சினிமா உலகிற்கு பரிச்சியமானார். பாபநாசத்திலேயே ட்ராமா கம்பெனியில் பாட்டெழுதி தந்தும் மெட்டமைத்தும் இசையை

கற்றக்கொடுத்தும் வந்த சிவன் அவர்கள், மார்கண்டேயனாக ஒரு நாடகத்தில் வேடம் தாங்கி நடித்துள்ளார்.

1935 ஆம் ஆண்டு முதன் முதலாக **'குசேலா'** என்ற படத்தில் குசேலராக வேடம் ஏற்று நடித்துள்ளார். இப்படத்தில் குசேலர் வேடம் அணிந்தார் என்பதைவிட குசேலரே இவர்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படத்தில் கண்ணன் மாளிகைக்கே மறுபடி வந்தேனோ? என்று பிரமிக்கும் போது அங்கு யாரும் சிவனைக் காணவில்லை. குசேலரையே கண்டனர் என்ற வகையில் சிவனின் நடிப்பு சிறப்புற இருந்தது. அவரது சிறிய உடல் அமைப்பு,பாவபூர்வமான குரலில் வெளிப்பட்டு அந்த பாத்திரத்திற்கு வெற்றியளித்தது.

'**த்யாக பூமி**' என்ற படமானது சிவன் அவர்களும்,முன்னாள் தமிழக முதலமைச்சரான எம்.ஜி.ராமசந்திரனின் மனைவி ஜானகியின் தந்தை திரு.ராஜகோபாலய்யர் அவர்களும் இணைந்து நடித்த தேசியப்படம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 1.14.2 நடித்த சில திரைப்படம்

- குசேலர்
- பக்தசேதா
- த்யாகபூமி
- குபேரகுசேல

### 1.14.3 சினிமாவில் இசை அமைப்பு

சிவன் அவர்கள் சினிமாவில் பாட்டெழுதிய முதல் படம் **'சீதா கல்யாணம்'**. திரு.ஜி.கே. சேசுகிரி என்பவர்'சீதா கல்யாணம்' என்ற படத்தை எடுக்க, டைரக்டர் முருகதாஸா பூனாவில் இருந்த ப்ரபாத் ஸ்டுடியோவில் படத்தை இயக்கினார். வி.ராகவன் முலம் இயக்குனருக்கு அறிமுகமாகிய சிவன், இந்த படத்தில் பாட்டெழுத தொடங்கினார். அது முதல் சுமார் 1000த்திற்கும் மேற்பட்ட பாடல்களை சினிமா துறைக்கு எழுதியிருக்கிறார்.

ஹரிகதையில் அனுபவம் பெற்று நாடகங்கக்குப் பாடல்கள் இயற்றிய அனுபவத்துடன் திரைத்துறையிலும் பிரபலமடைந்து சிவனை உலகிற்கு இனம் காட்டியது. தனது முப்பதாவது வயதிலிருந்து சினிமாவிற்கு பாடல் எழுதியதோடு

மட்டுமல்லாமல் கர்நாடக சங்கீதத்தின் தன்மை கெடாமல் பாதுகாத்த பெருமை இவருக்கு உண்டு.

### 1.14.4 பிரபலமான பாடல்கள்

சிவன் சினிமாவில் பாடிய பாடல்களில் பல பாடல்கள் பிரபலமடைந்தும் உள்ளது. அவற்றுள் சில கீழே காண்போம்.

- உனக்கும் எனக்கும் என்ன
- கண்ணன் மாளிகைக்கே
- மன்மத லீலை வென்றார் உண்டோ
- ராதே உனக்கு கோபம் ஆகாதடி

### 1.14.5 திரைப்படத்திற்காக சிவனிடம் கற்றவர்கள்

டாக்டர் எம்.எஸ்.சுப்புலட்சுமி, எம்.கே.தியாகராஜ பாகவதர், பி.யு. சின்னப்பா, முசிரி அய்யர், ஜீ.என்.பாலசுப்ரமணியம், எம்.எல்.வசந்தகுமாரி. டி.ஆர்.மகாலிங்கம், தண்டபாணி தேசிகர், பெரியநாயகி, பி.பி.ரங்காச்சாரி, வசந்த்ரா, ராதா ஜெயலட்சுமி, களத்தூர் சாமா, என்.சி.வசந்த கோகிலம், நடிகை அசுவத் தாமா பானுமதி, ராமகிருஷ்ணா போன்ற பலரும் ஆவார்கள்.

### 1.4.6 சிவனின் திறமை அறிந்து பாராட்டியவர்கள்

- முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ராமசந்திரன்
- கலாச்சேத்ர ருக்மணி தேவி
- ஜெமினி வாசன்
- டாக்டர் எம்.எஸ்.சுப்புலட்சுமி
- செம்மங்குடி சீனிவாச அய்யர்

## 1.15 பொதிகை டி.வியில் பாபநாசம் சிவன் பற்றி பேசியவர்கள்

திரு லால்குடி ஜெயராமன் மற்றும் திரு சங்கரமேனன் இருவரும் பொதிகை டி.வியில் சிவனை பற்றிய தமது அனுபவங்களையும், அவரின் திறமைகளை பற்றியும் கூறியுள்ளனர்.அவற்றை நாம் விரிவாக காண்போம்.

### 1.15.1 திரு லால்குடி ஜெயராமன்

*அவருடைய பாடல்கள் பக்தி பரவசத்துடன் எளிமையான பதங்கள், சங்கீதத்திற்கு பொருத்தமான இடத்தில் விழுகின்ற அழகு இவையாவும் சிறந்த அம்சங்களாக இருந்தது. ஒரு சாஷித்ய கர்த்தா சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அந்த அம்சம் சிவனிடம் நிரம்பி இருந்தது. மொழி அறிவும், சங்கீத அறிவும் பக்தியும் சேர்ந்து விட்டதால் சாஹித்யங்கள் மிகவும் பிரபலமடைந்துவிட்டது. அவர் நிறைய கச்சேரிகள் செய்திருக்கிறார். அறுபது வருடங்களுக்கு முன்பு மதுரையில் ஒரு கச்சேரியில் எனது தகப்பனான***லால்குடி திரு.ஏ.சு. கோபாலய்யர்***பக்கவாத்தியமாக வயலின் வாசித்திருக்கிறார். சமீப காலமாக நானும் கச்சேரிகளில் அவருக்கு வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதை நான் பாக்யமாக கருதுகிறேன். நேராக படிக்கவும், நேரிலே சில பாட்டுக்கள் கற்றுக் கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்தது. என்ன தவம் செய்தனை என்ற பாடலை நான் வாசித்தபோது அதைக்கேட்டு இந்த பாடலை உனக்காகவே செய்த மாதிரி இருக்கு என்று கூறிய போது மகிழச்சியாக இருந்தது. பாபாநாசம் சிவன் திரைப்படத்துறையிலும், கர்நாடக இசைத்துறையிலும் சாகித்ய கர்த்தாவாக விளங்கினார். அவருடைய திரைப்படப்பாடல்கள் தெருவெல்லாம் முழங்கின. உதாரணமாக மன்மத லீலையை வென்றவர் உண்டோ. ஒரு சாஹித்ய கர்த்தாவே திரைப்படத்துறையிலும் கர்நாடகத் இசைத் துறையிலும் சிறந்து விளங்குவது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. மற்றொரு திரைப்பட பாடலான ‘‘கிருஷ்ணா முகுந்தா முராரே” என்ற பாடலில் கிருஷ்ணன் நடனம் ஆடுது போல் அமைந்திருக்கும். ஏனென்றால் தானே அனுபவித்து ரசித்து பக்தியுடன் இப்பாடலை எழுதி இசை அமைத்திருக்கிறார் என்று கூறினார். கன்னட திரை உலகிலும் தமிழ் திரை உலகிலும் முன்னணி இசை அமைப்பாளராக 1930-1940 வரை திகழ்ந்தார்.*

### 1.15.2 திரு. சங்கரன் மேனன்

*பாபநாசம் சிவனை 1927-28-ல் முதன்முதலாக பார்த்த ஞாபகம். 1933-ல் அன்னிபெசன்ட் காலமாகிவிட்டார். அவர் நினைவாக ஒரு பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. அந்த பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு இசை கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற கொள்கை இருந்தது. ருக்மணிதேவிக்கும் பாட்டு சாம்பிரதாயம் மாணவர்களுக்கு தெரியப்படுத்தனும் என்கிற எண்ணம் இருந்தது. ருக்மணி தேவி கேட்டுக் கொண்டபடி பாபநாசம் சிவன் அவர்கள் கலாச்சேத்திராவில் குழந்தைகளுக்கு பாட்டு சொல்லிக் கொடுத்தார்.*

*செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் பாபநாசம் சிவன், சிறந்த நண்பராகவும் மனித நேயத்தோடு பிரியமுடனும் பழகுவார் என்று கூறியுள்ளார்.*

### 1.16 பெற்ற விருதுகள்

| ஆண்டு | விருது | வழங்கியது |
|---|---|---|
| 1962 | சங்கீத நடக் அகாடமி.ஃபெலோஷிப் | சங்கீத நடக் அகாடமி[9] |
| 1965 | இசைபேரறிஞர் | தமிழ் இசை சங்கம் (சென்னை)[10] |
| 1950 | சங்கீத சஹித்ய கலாசிகாமணி | இந்தியன் ஃபன் ஆர்ட் சொசைட்டி[10] |
| 1950 | சிவ புண்ய கான மணி | காஞ்சி ஆச்சரியரின் 60- வது பிறந்தநாளுக்காக கொடுக்கப்பட்டது.[10] |
| 1962 | குடியரசுத்தலைவர் விருது | இந்திய ஜனாதிபதி[10] |
| 1971 | சங்கீதகலாநிதி | மியுசிக் அகாடமி[10] |
| 1972 | பத்ம பூசன் | இந்திய குடியரசு[10] |

### 1.17 மறைவு

பாபநாசம் சிவன் அவர்கள் கச்சேரி முதல் சினிமா வரையிலும், பாமரமக்கள் தொடங்கி பண்டிதர் வரையில் எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு இறைபக்தியுடன் பல பாடல்களை இவ்வுலகிற்கு தந்து இசைக்கு தொண்டாற்றிய பெருமைக்குரியவர் இவர் 1.10.1973 அன்று இறைவனடி சேர்ந்தார்.11

### முடிவுரை

இசையாகவே வாழ்ந்த பாபநாசம் சிவனின் வாழ்க்கை இசை உலகில் உள்ள அனைவருக்குமே ஒரு பாடமாகும். இவருடைய எண்ணம், சொல், செயல் அனைத்துமே இசைக்கென அர்பணிக்கப்பட்டது எனில் அது மிகையாகாது. இவருடைய பாடல்களை கற்றுத்தேர்ந்து பல இடங்களில் பாடி பிரபலப் படுத்துவதே இசைமாந்தர்களின் கடமை எனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. கலாமணி தென்னை இசையியல் உரிமை பக்கம்-292

| | | | | |
|---|---|---|---|---|
| | சங்கீதவித்வான் பி.டி.செல்லத்துரை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, சென்னை - 600 028 | | வைகறைப்பதிப்பகம், திண்டுகல் நான்காம் பதிப்பு-செப்-2000 | |
| 2. | பாபாநாசம் சிவன் | எனது நினைவு கடல் | ருக்மணி ரமணி அக்டோ-1996 | பக்கம்-40 |
| 3. | பாபாநாசம் சிவன் | எனது நினைவு கடல் | ருக்மணி ரமணி அக்டோ-1996 | பக்கம்-1 |
| 4. | பாபாநாசம் சிவன் | எனது நினைவு கடல் | ருக்மணி ரமணி அக்டோ-1996 | பக்கம்-5 |
| 5. | டாகடர்.கே.ர.பக்கிரிசாமி | இந்திய இசைக்கருவூலம் | குசேலர் பதிப்பகம் (சென்னை), செப்- 2006 | பக்கம்-635 |
| 6. | பாபநாசம் சிவன் | எனது நினைவு கடல் | ருக்மணி ரமணி அக்டோ-1996 | பக்கம்-35 |
| 7. | ராதகிருஷ்ணன் Ph.D. | Sri Papanasam Sivan Contributions as a composer | Department of Music and Department of Engineering 2017 | பக்கம்-25 |
| 8. | ஆ.யு. பாகீரதி | Sri Papanasam Sivan Contributions as a composer | Department of Music and Department of Engineering 2017 | பக்கம்-80 |
| 9. | கலாமணி சங்கீதவித்வான் பி.டி.செல்லத்துறை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி | தென்னக இசையியல் | வைகறைப்பதிப்பகம், திண்டுகல் நான்காம் பதிப்பு-செப்-2000 | பக்கம்-292 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | P.G.Padma Gowri and K.Kanakavalli | Sri Papanasam Sivan Contributions as a composer | Deparment of Music and Department of Civil Engineering | பக்கம்-50 |
| 11. | டாக்டர்.கே.ர.பக்கிரிசாமி | இந்திய இசைக்கருவூலம் | குசேலர் பதிப்பகம் (சென்னை),செப்-2006 | பக்கம்-635 |

# இயல் II

## பாபநாசம் சிவனின் இசை உருப்படிகள் - ஒரு நோக்கு

முன்னுரை

2.1. கீர்த்தன மாலை

2.2. தாளம்

2.3. உருப்படிகளின் பட்டியல்

2.3.1 தானவர்ணம்

2.3.2 பதவர்ணம்

2.3.3 இராகமாலிகை

2.3.4 தில்லாணா

2.3.5 விருத்தம்

2.3.6 கண்ணிகள்

2.3.7 மங்களம்

2.3.8 வர்ணமெட்டு

2.3.9 கீர்தனைகள்

2.3.9.1 விநாயகர்

2.3.9.2 சிவன்

2.3.9.3 தேவி

2.3.9.4 விஷ்ணு

2.3.9.5 முருகன்

2.3.9.6 பாரதமாத மற்றும் காந்தியடிகள்

2.4. பாடலின் பொருள்

2.4.1 விநாயகர்

2.4.2 சிவன்

2.4.3 தேவி

2.4.4 விஷ்ணு

2.4.5 முருகன்

முடிவுரை

# இயல் II

## பாபநாசம் சிவனின் இசை உருப்படிகள் - ஒரு நோக்கு

**முன்னுரை**

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இசைத்தொண்டாற்றிய பல வாக்கேயக்காரர்களின் வரலாறும், அவர்களின் இசைத்தொண்டும் அந்தந்த காலக்கட்டத்திலிருந்து இசை மற்றும் இசை உருப்படிகளை எடுத்துக்காட்டும் பிரதிபிம்பங்களாக திகழ்கின்றது எனில் அது மிகையாகாது. அவ்வகையில் கி.பி.20 ஆம் நூறறாண்டுகளில் தமிழ் இசை உலகில் மாபெரும் வாக்கேயக்காரராகத் திகழ்ந்தவர் பாபநாசம் சிவன் அவர்கள் பக்தி ரசத்துடனும், சொல்நயம், பொருள் நயம் கொண்டு மிக எளிய முறையில் பல உருப்படிகளை உருவாக்கியதன் மூலம் சிவனின் திறமைகளை நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

பார்போற்றும் பாபநாசம் சிவன், சுமார் 2000த்திற்கும் மேற்பட்ட உருப்படிகளை இயற்றி இசை உலகிற்கு அளித்துள்ளார். அவருடையப்படைப்புகளைப் பற்றி எழுத வேண்டுமானால் அது அளவிட முடியாதது. தனது இசைத் திறமையின் மூலம் கால் பதிக்காத இடமே இல்லை சிறந்த வாக்கேயகாரராகவும், கச்சேரி செய்வதிலும், அரசியலிலும், திரைத் துறையிலும், தேசப்பற்றிலும் சிறந்து விளங்கிய சிவன் கால் பதித்த துறை அனைத்திலும் செவ்வென துலங்கியவர். இவற்றின் மூலம் இவரின் பல்துறைப் பரிணாம அனுபவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

"**பாபநாசம் சிவன் பாடல்களில் மோஹன இராக உருப்படிகளின் இசை அமைதி**'' எனும் ஆராய்ச்சினுள் செல்வதற்கு முன், அவருடைய படைப்புகளைப் பற்றி ஒரு பொதுவான நோக்கு அவசியமாகிறது. பல இராகங்களை கையாண்டுள்ள பட்டியல் பற்றியும், பல தெய்வங்களைப் பற்றி பாடல்களைப் புனைந்துள்ளது பற்றியும் வெவ்வேறு தாளங்களைக் கையாண்டுள்ளது பற்றியும் ஒரு பட்டியலிட்டு பார்க்கும் பொழுது அவருக்கு இருக்கும் இராகத்தாள ஞானமும் சொல்லாட்ச்சியும் பல ஊர்களில் வீற்றிருக்கும் தெய்வங்களைப் பற்றிய அறிவாற்றலாகட்டும் '**குன்றின் மேலிட்ட விளக்காக**' தெளிவாகத் தெரிய வரும். இவ்வியலில் அவருடைய இசை உருப்படிகள் பற்றிய சிறு அமைப்பினைக் காண்போம்.

## 2.1 கீர்த்தன மாலை

பாபநாசம் சிவன் இயற்றிய உருப்படிகள் ஏழு பாகங்களாக "**ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தன மாலை**" என்ற புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன. ஏழு புத்தகங்களிலும் 556 உருப்படிகள் காணப்படுகின்றது. அவற்றின் பட்டியல் பின்வருமாறு.

| **வ.எண்** | **பாகம்** | **ஆண்டு** | **பாடல்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | முதல் பாகம் | 1934 | 100 பாடல்கள் |
| 2 | இரண்டாம் பாகம் | 1980 (2வது பதிப்பு) | 101 பாடல்கள் |
| 3 | மூன்றாம் பாகம் | 1968 | 101 பாடல்கள் |
| 4 | நான்காம் பாகம் | 1973 | 101 பாடல்கள் |
| 5 | ஐந்தாம் பாகம் | 1985 | 50 பாடல்கள் |
| 6 | ஆறாம் பாகம் | 2000 | 51 பாடல்கள் |
| 7 | ஏழாம் பாகம் | 2006 | 52 பாடல்கள் |

## 2.2 தாளம்

சிவன் அவர்கள் ஆதி,ரூபகம், ஜம்பை, சாபு,த்ரிபுட, தேசாதி போன்ற பல வகை தாளங்களை அவரது உருப்படிகளில் செலுத்தி பாடலுக்கு இன்னும் அதிக சுவையையும் விறுவிறுப்பையும் ஊட்டியுள்ளார். இவ்வுலகினில் மனிதனுக்கு காற்று எவ்வளவு அவசியமோ அதே போல் ஒரு உருப்படி நன்கு அமைவதற்கு தாளமும் அவசியமாகிறது. பாபநாசம் சிவனிடம் இராக ஞானம் மட்டுமின்றி, தாள ஞானமும் கொட்டிக் கிடக்கின்றது என்பது அவரின் உருப்படிகளை நோக்கும் போதே தெளிவாகிறது.

எ.கா.

| **தாளம்** | **பாடலின் துவக்கம்** | **ராகம்** | **தெய்வம்** |
|---|---|---|---|
| ஆதி | கஜவதன | ஸ்ரீரஞ்சனி | விநாயகர் |
| ரூபகம் | கற்பகாம்பிகே | பிலஹரி | தேவி |

| | | | |
|---|---|---|---|
| ஜம்பை | நிஜமுன்னை | பிலஹரி | தேவி |
| சாபு | சித்தம்இரங்காதேனையா | ஸஹானா | முருகன் |
| தேசாத் | புவனேஸ்வரி | மணிரங்கு | தேவி |
| த்ரிபுட | கருணாநிதியே தாயே | பௌளி | தேவி |
| அட | நடராஜனே | வஸந்தா | சிவன் |

இவற்றில் ஆதி தாளமே, பாபநாசம் சிவனால் அதிகமாக கையாளப்பட்டுள்ள தாளமாகும்.

### 2.3 உருப்படிகளின் பட்டியல்

| உருப்படிகள் | முதல் பாகம் | இரண்டாம் பாகம் | மூன்றாம் பாகம் | நான்காம் பாகம் | ஐந்தாம் பாகம் | ஆறாம் பாகம் | ஏழாம் பாகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பதவர்ணம் | - | 2 | 1 | 2 | - | - | - | 5 |
| தானவர்ணம் | - | 1 | 1 | - | 1 | - | - | 3 |
| இராகமாலிகை | 1 | 1 | 2 | | | 1 | 1 | 6 |
| தில்லானா | - | 1 | - | 1 | - | - | - | 2 |
| விருத்தம் | - | - | - | - | 2 | 2 | 7 | 11 |
| கண்ணிகள் | 3 | - | 1 | - | 4 | - | - | 8 |
| மங்களம் | 1 | 1 | - | - | - | - | - | 2 |
| **கீர்த்தனைகள்** | | | | | | | | |
| தேவி | 11 | 25 | 14 | 34 | 4 | 1 | 5 | 94 |
| முருகன் | 15 | 21 | 5 | 12 | 1 | 2 | - | 56 |
| விநாயகர் | 2 | 7 | 1 | 2 | 1 | 1 | - | 14 |
| சிவன் | 31 | 42 | 23 | 26 | 14 | 8 | 8 | 152 |
| விஷ்ணு | 24 | - | 38 | 16 | 16 | 19 | 12 | 125 |

| உருப்படிகள் | முதல் பாகம் | இரண்டாம் பாகம் | மூன்றாம் பாகம் | நான்காம் பாகம் | ஐந்தாம் பாகம் | ஆறாம் பாகம் | ஏழாம் பாகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆஞ்சநேயர் | - | - | - | 3 | - | - | - | 3 |
| ஐயப்பன் | - | - | 1 | - | - | - | - | 1 |
| புத்தர் | - | - | - | - | 2 | - | - | 2 |
| முனிவர் | 2 | | 8 | - | - | - | - | 10 |
| பாரதம் மற்றும் காந்தியடிகள் | - | - | - | - | 4 | 10 | - | 14 |
| பொது | 5 | | 4 | 3 | 4 | 9 | 17 | 42 |
| நவக்ரக துதி | 4 | | 1 | | | | | 5 |
| பஜன் | | 1 | | | | | | 1 |
| **மொத்தம்** | | | | | | | | **556** |

சிவன், தமிழ் மொழியிலும், சமஸ்கிருதம் மொழியிலும் பாடல்கள் புனைந்துள்ளார். இவர் இயற்றிய தானவர்ணம், பதவர்ணம், கிருதி, இராகமாளிகை, தில்லானா, விருத்தம், கண்ணிகள், மங்களம், பஜனை, பாரதமாதா மற்றும் காந்தியடிகளின் பாடல்கள், பொதுவான பாடல்கள் போன்ற சில உருப்படிகளை பின்வருமாறு வரிசைப்படுத்தி காண்போம்.

2.3.1**தானவர்ணம்**

| **வ.எண்** | **பாடலின் துவக்கம்** | **இராகம்** | **தாளம்** |
|---|---|---|---|
| 1. | சுவாமி உன்னை ஸதா | ஆரபி | ஆதி |
| 2. | தஞ்சம் என்றாலே | ஆபோகி | ஆதி |
| 3. | நீயே பேதை | பந்துவராளி | ஆதி |

2.3.2 பதவர்ணம்

| வ.எண் | பாடலின் துவக்கம் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | நீ இந்த மாயம் செய்தால் | தன்யாசி | ஆதி |
| 2. | ஸ்வாமி நீ மனமிரங்கி அருள்தா | ஸ்ரீ ரஞ்சனி | ஆதி |
| 3. | மாயம் ஏதோ ஸ்வாமி | மாயமாளவகொளை | ஆதி |
| 4. | ஸ்வாமி நானுன்றன்அடிமை | நாட்டைக் குறிஞ்சி | ஆதி |
| 5. | உன்னை நினைந்து | தேவமனோஹரி | ஆதி |

2.3.3இராகமாலிகை

| வ.எண் | பாடலின் துவக்கம் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | கதியுதவு மாமதுர | இராகமாலிகை | ஆதி |
| 2. | மாலை சூட்டுவேன் | இராகமாலிகை | ஆதி |
| 3. | கல் பகவல்லீவாம | இராகமாலிகை | ஆதி |
| 4. | யசோதாபாலா | இராகமாலிகை | ஆதி |
| 5. | அன்னையின் காலில் | இராகமலிகை | ஆதி |
| 6. | ஸ்ரீவைகுண்டபதே | இராகமலிகை | ஆதி |

2.3.4 தில்லானா

| வ.எண் | பாடலின் துவக்கம் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | தீம் தரன | ஷண்முகப்பரியா | ஆதி |
| 2. | தீம் தன உதார | பெஹாக் | ஆதி |

2.3.5. விருத்தம்

| வ.எண் | பாடலின் துவக்கம் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | திருமாலின் ஸோதரியே | விருத்தம் | |
| 2. | கருமாரி கருமாரியென | விருத்தம் | |
| 3, | வண்டார் குடில் | விருத்தம் | |
| 4. | உன் உருவம் | விருத்தம் | |
| 5. | ஒரு பிழையும் | விருத்தம் | |
| 6. | கடிமதிற் கோபுரம் | விருத்தம் | |
| 7. | திருக்கயிலை மலை | விருத்தம் | |
| 8, | திருவளரும் ஐயாறு | விருத்தம் | |
| 9. | தாரித்தரிய ஹரபஞ்சகம் | விருத்தம் | |
| 10. | பவளமால் வரையை | விருத்தம் | |
| 11. | நவரத்னமிழைத்த | விருத்தம் | |

2.3.6 கண்ணிகள்

| வ.எண் | பாடலின் துவக்கம் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | சொல்லு பாப்பா | முகாரி | ஆதி |
| 2. | திருவளர் மயிலையின் | கமாஸ் | ஆதி |
| 3. | பற்பல பொற்பணி | கமாஸ் | ரூபகம் |
| 4. | ஆண்டவனன்பே | சிவரஞ்சனி | ஆதி |
| 5. | இந்த்ர ஜாலவித்தைக்காரன் | பந்துவராளி | ஆதி |
| 6. | பாருலகில் | மோஹனம் | ஆதி |
| 7. | ஜோதி மயமானலிங்கம் | குறிஞ்சி | ஆதி |
| 8. | பூமியில் மானிட ஜென்மடைந்தும் | சிந்துபைரவி | ஆதி |

2.3.7 மங்களம்

| வ.எண் | பாடலின் துவக்கம் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | மங்கள மருள் ஸ்ரீ | ஸ்ரீ ராகம் | ரூபகம் |
| 2. | ஸ்ரீ ராம ஜய மங்களம் | ஸீரடி | ஆதி |

2.3.8 வர்ணமொட்டு

| வ.எண் | பாடலின் துவக்கம் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | கருணை செவ்வாய் | ஹம்ஸத்வனி | தேசாதி |
| 2. | நிஜமுன்னை | பிலஹரி | ஜம்பை |
| 3. | ஹரனே இன்னும் | பெஹாக் | ஆதி |
| 4. | காரிருளொக்க | கரஹரப்ரியா | ஆதி |

2.3.9 கீர்தனைகள்

2.3.9.1விநாயகர்

| வ.எண் | பாடலின் துவக்கம் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | கருணை செய்வாய் | ஹம்சத்வனி | ஆதி |
| 2. | கஜவதன | ஸ்ரீரஞ்சனி | ஆதி |
| 3. | மூலதாரமூர்த்தியே | ஹம்சத்வனி | ஆதி |
| 4. | ஸதாசிவகுமார | சுத்தசாவேரி | ஆதி |
| 5. | ஸ்ரீ கணேசசரணம் | திலங் | ஆதி |

2.3.9.2. சிவன்

| வ.எண் | பாடலின் துவக்கம் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | நடராஜோ | வஸந்தா | அட |
| 2. | ஆரும் தெயவ்ம் | காம்போஜி | ஆதி |
| 3. | நம்பிக்கெட்டவர் | ஹிந்தோளம் | ஆதி |

| | | | |
|---|---|---|---|
| 4. | பிறவாவரம் | லதாங்கி | ஆதி |
| 5. | சிவாயநமவென்றே | குந்தலவராளி | ஆதி |

2.3.9.3 **தேவி**

| **வ.எண்** | **பாடலின் துவக்கம்** | **இராகம்** | **தாளம்** |
|---|---|---|---|
| 1. | அபயாம்பிகா | சங்கராபரணம் | ஆதி |
| 2. | அம்ப உன்மேல் | பெஹாக் | ஆதி |
| 3. | கற்பகமே | மத்யமாவதி | ஆதி |
| 4. | கற்பாகம்பிகே | பிலஹரி | ரூபகம் |
| 5. | புவனேச்வரி | மணிரங்கு | தேசாதி |
| 6. | மங்கள நாயகி | தோடி | ஆதி |
| **வ.எண்** | **பாடலின் துவக்கம்** | **இராகம்** | **தாளம்** |
| 7. | அகிலாண்ட | சங்கராபரணம் | ஆதி |
| 8. | விசாலாட்சி | பேகடா | மீ.சாபு |
| 9. | அளவில்லையே நீலாயதாட்சி | முகாரி | தேசாதி |

2.3.9.4 **விஷ்ணு**

| **வ.எண்** | **பாடலின் துவக்கம்** | **இராகம்** | **தாளம்** |
|---|---|---|---|
| 1. | நாமமொன்றே போதாதோ | கரஹரப்ரியா | ஆதி |
| 2. | ஸ்ரீபத்மநாபா | கேதார கௌளை | ஆதி |
| 4. | தயாநிதே | நாட்டை | ஆதி |
| 5. | ராமசந்திரன் | கல்யாணி | ஆதி |

2.3.9.5 முருகன்

| வ.எண் | பாடலின் துவக்கம் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | முருகா முழுமதி பழிக்கும் | ஸாவேரி | ஆதி |
| 2. | உலக வாழ்விலும் | அடாணா | ஆதி |
| 3. | பழனியப்ப நின் பதம் | ஸிம்மேந்திரமத்யமம் | ஆதி |
| 4. | சித்தம் இரங்காதேனையா | ஸஹானா | மிச்ரசாபு |
| 5. | ஸ்ரீவல்லிதேவஸேனாபதே | பைரவி | ஆதி |

2.3.9.6 பாரதமாதாமற்றும் காந்தியடிகள்

| வ.எண் | பாடலின் துவக்கம் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | பாரதமாதா பரிபூர்ண | நடபைரவி | ஆதி |
| 2. | மஹாத்மா ஒருவரே | மணிரங்கு | ஆதி |
| 3. | நம்நாடு | சுத்த சாவேரி | ஆதி |
| 4. | ஜயபேரிகை | காம்போஜி | ஆதி |
| 5. | காந்தியை போலொரு | செஞ்சுருட்டி | ஆதி |
| 6. | தமிழ் மணம் கமழ வேண்டும் | மணிரங்கு | ஆதி |

2.4. பாடலின் பொருள்

பாடல்களின் பொருள் வளம் மிகவும் இனிமைப் பயப்பதாகும். ஓரிரெண்டு கிருதிகளை எடுத்தக்காட்டாகக் கொண்டு, அதன் பொருள் அழகை ஆய்வாளர் முன் வைத்துள்ளார்.

2.4.1 விநாயகர்

**பாடல் - மூலாதார மூர்த்தியே இராகம் - ஹம்சத்வனி தாளம் - ஆதி**

இந்த உலகம் தோன்றுவதற்கு முன்னே இருப்பவனே, கனம் பொருந்தியவனே உம்பாதம் சரணடைகின்றேன். இறைவன் முருகனுக்கு முன்பாக பிறந்தவனே, சிவன், பார்வதிக்கு முதல்வனே, முனிவர்கள் போற்றும் தெய்வமே என்னை ஆசிர்வதியும்,

தும்பை அருகம்புல் தொடுத்து உம்மை அன்புடன் அர்ச்சனை செய்கிறேன், என் எல்லாவித துன்பத்தையும் துடைத்து இன்பத்தையும் ஆறுதலையும் தந்தருளும் வரதனே, எப்பொழுது நீயே எனக்கு துணை புரிவாயா என்று வேண்டுவது போல் பாடியுள்ளார்.[1]

### 2.4.2 சிவன்

**பாடல் - பிறவாவரம்இராகம் - லதாங்கி தாளம் - ஆதி**

சிவனிடம் வேண்டுவது போல் பாபநாசம் சிவன் இப்பாடலை பக்தி பாவத்துடன் இயற்றியுள்ளார். இந்த ஒரு ஜென்மமே போதும் என வாழ்வில் மீண்டும் பிறக்காமல் இருக்கும் வரம் தந்திடும் இறைவா. அப்படியே நான் பிறந்தாலும் உம் பாதத்தை மறக்காமல் இருக்க வேண்டும் என வேண்டுகிறார். நீயே என் வாழ்வின் துணை, வந்து என்னை ஆசிர்வதித்து என் வேண்டுதலை கேட்டு என் வாழ்வில் உள்ள குறைகளை நீக்கிவிடும். உம் பாதம் பணிந்து உம்மிடத்திலே எல்லாவற்றையும் ஒப்புவிக்கிறேன் என கெஞ்சும் பாணியில் சிவனிடம் வேண்டுகிறார்.[2]

### 2.4.3 தேவி

**பாடல் - கருணாநிதியே தாயே இராகம் - பௌளி தாளம் - த்ச்ரதிருப்புட**

அன்னையிடம் பிள்ளை கெஞ்சுவது போல் அமைந்திருக்கும் இப்பாடலில் சிவன், தேவையை தன் தாயாக நினைத்து மன்றாடுகிறார்.

கருணை மிகுந்தவளே, சூரியனின் ஒளி பட்டால் எப்படி பனி உருக்கிடுமோ, அப்படியே உன் பார்வை என் மீது பட்டால் என் பாவம் என்ற நோய் என்னை விட்டு விலகும் அம்மா. உம் ஒரக்கண்ணிலாவது என்னை பார்த்துவிடும் என்றும், உன்னை மறந்து என் வாழ்வில் நான் ஒரு கனமும் இருந்ததில்லை. அன்னையை மறந்து பிள்ளை இருந்ததுண்டோ, நானும் உன்னை அப்படித்தானே நினைத்து நம்பினேன். எனது பிழை பொறுத்தருளும்தாயே என்று வேண்டுகிறார்.[3]

### 2.4.4 விஷ்ணு

**பாடல் - மோஹன ச்ருங்கார இராகம் - மோஹனம் தாளம் - ஆதி**

விஷ்ணுவை வர்ணிக்கும் வகையில் இப்பாடலில், உம்முடைய ஒருவரின் அழகிற்கு ஆயிரம் மன்மதன் போன்ற அழகையுடையவன் வந்தாலும் அதற்கு ஈடாகாது. உமது முகத்தில் அழகும், அவற்றில் அமைந்துள்ள இரு கண்களில் அழகும் சொல்வதற்கு வார்த்தை இல்லை என்பனவாறு மலர் வந்து தேன்குடிக்கும் வகையில் அமைந்துள்ளது. உமது அமுதம் போன்ற மொழியினை கொண்டு, இந்த

உலகினை மறந்து, மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்தில் சென்று உமது புலங்குழலின் இசையாலே கேட்பவர்களை மெய் மறக்கச் செய்யும் உம்முடைய அழகிற்கு ஈடுயினை இவ்வுலகிலேயே எவரும் இல்லை என பாடியுள்ளார்[4].

### 2.4.5 முருகன்

**பாடல்- சித்தம் இரங்காதேனையா இராகம் - ஸஹானா தாளம்- மிச்ர சாபு**

முருகனிடம் கேள்வி கேட்கும் வண்ணத்தில் அமைந்திருக்கும் இப்பாடலில் சிவன் அவர்கள், ஏன் எனக்கு இரங்காமல் இருக்கின்றீர், சிறிய அளவிலாவது இறைவன் இறங்க கூடாதா, உம்மிடம் வரும் பக்தர்களுக்கெல்லாம் துணைபுரிவீர் என நம்பினேன். தலையில் மலை விழுந்தாலும் என்னை காப்பாற்ற நீர் உண்டென்று இந்த உலகம் பார்க்க இரவும் பகலும் உம்மை பணிந்தேனே,ஏன் என் மீது இரங்கவில்லை என பாடியுள்ளார்.[5]

**முடிவுரை**

பல தெய்வங்கள், பலவகை உருப்படிகள் என்று இருப்பினும் பாடல்களின் வார்த்தைகளில் பொருள்நயம் இல்லையென்றால், பலரால் கையாளப்பட்டு, ரசிக்கப்பட்டு, பாராட்டப்படும் சிறப்பு கிடைப்பதற்கரிதே. பாபநாசம் சிவனின் வாழ்நாளிலேயே இசை உலகில் வாழ்ந்தவர்கள், இவர் பாடல்களை பல இடங்களில் பாடி, இவரிடம் நேரடியாக கற்று இசைத் தொண்டாற்றியுள்ளார்கள். இதிலிருந்தே இவருடைய இசை உருப்படிகளின் உன்னதம் வெளிப்படுகின்றது என்பது உண்மையே.

**அடிக்குறிப்புகள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ருக்மணிரமணி | ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை | பாகம் - 2 | பக்.16 |
| 2. | மேலது | மேலது | பாகம் - 2 | பக்.240 |
| 3. | மேலது | மேலது | பாகம் - 2 | பக்.113 |
| 4. | மேலது | மேலது | பாகம் - 3 | பக்.199 |
| 5. | மேலது | மேலது | பாகம் - 2 | பக்.65 |

# இயல் - III

## மோஹன இராக உருப்படிகளின் இசை அமைப்பு

முன்னுரை

3.1. மோஹன இராக உருப்படிகளின் பட்டியல்

3.2 மோஹன இராக லட்க்ஷணம்

3.3 மோஹன இராகத்தின் தோற்றம் வளர்ச்சி

3.4 பிற நாட்டில் மோஹனம்

3.5 தமிழ் மொழியில் மோஹன கிரீடம்

3.6 மோஹன இராகத்தின் பண்பு மற்றும் சிறப்பு

3.7 த்ரயோதச லட்க்ஷணம்

3.8 தசவித கமகம்

3.9 ஸ்வராஷரம்

3.10 இராக சஞ்சாரம்

3.11 மோஹன இராக உருப்படிகளின் இசை அமைப்பு

- 3.11.1 காபாலி
- 3.11.2 நாராயண திவ்ய நாமம்
- 3.11.3 மோஹன ச்ருங்கார
- 3.11.4 ஸௌந்தர்ய
- 3.11.5 மயில் வாஹன
- 3.11.6 துதிகையனை
- 3.11.7 பாருலகில்
- 3.11.8 காண ஆவல் கொண்டோங்கும்
- 3.11.9 என்னை விட்டோடாதேடா
- 3.11.10 கிரிதர கோபாலா

முடிவுரை

# இயல் III

## மோஹன இராக உருப்படிகளின் இசை அமைப்பு

**முன்னுரை**

ஸ்வரங்களைச் சேர்த்து, அவற்றை பாங்குற அமைத்து, இசை வடிவமாக வடித்தெடுப்பதே இசை உருப்படிகளாகும். இந்த ஸ்வரச்சேர்க்கைகளே இராகங்கள் எனப்படும். ஸ்வரச்சேர்க்கைகளின் வேறுப்பாட்டால் இராகங்கள் பல உருவாகின்றன. தாய் இராகம் 72 என்றும், அவற்றில் இருந்து பிறக்கும் ஜன்ய இராகங்கள் எண்ணிலடங்கா என்பதும் யாவரும் அறிந்ததே.

எந்த ஒரு இராகமாக இருந்தாலும் அதற்கென்று தனி சட்ட திட்டங்கள் அடங்கிய இலக்கணங்களை நம் முன்னோர்கள் வகுத்துச் சென்றுள்ளார்கள். மோஹன இராகம் பெயருக்கு ஏற்றாற்போல் ஒரு அழகிய இராகமாகும். இதன் இலக்கணம் அதாவது அடிப்படை இசை அமைதியான

- த்ரயோதச லட்க்ஷணம்
- தசவித கமகம்
- ஸ்வராக்ஷரம்

என்ற மூன்றையும் பாபநாசம் சிவன் இயற்றிய மோஹன இராக உருப்படிகளில் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதை ஆய்வாளர், மோஹன இராகத்தில் அமைந்த பத்து உருப்படிகளிலும் ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.

### 3.1 மோஹன இராக உருப்படிகளின் பட்டியல்

| வ.எண். | பாடலின் துவக்கம் | தாளம் | தெய்வத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | காபாலி | ஆதி | சிவன் |
| 2. | நாராயண திவ்ய | ஆதி | நாராயணன் |
| 3. | மோஹன ச்ருங்கார | ஆதி | பெருமாள் |
| 4. | ஸௌந்தர்ய | ஆதி | சிவன் |
| 5. | மயில் வாஹன | ஆதி | முருகன் |
| 6. | துதிகையனை | ஆதி | விநாயகன் |

| வ.எண். | பாடலின் துவக்கம் | தாளம் | தெய்வத்தின் பெயர் |
|---|---|---|---|
| 7. | பாருலகில் | ஆதி | பொது |
| 8. | காண ஆவல் கொண்டோங்கும் | ஆதி | மகாத்மா உதங்கர் எனும் படப் பாடல் |
| 9. | என்னை விட்போடாதேடா | ஆதி | நாராயணன் (கண்ணன்) |
| 10. | கிரிதர கோபாலா | ஆதி | நுாராயணன |

விநாயகர், முருகன், சிவன், பெருமாள் என்ற நான்கு கடவுளர்களின் மேல் மேற்கூறிய மோஹன இராகப் பாடல்களானது அமைந்துள்ளது. இவற்றுள் நான்கு பாடல்கள் பெருமாள், கண்ணன், கோபாலன் என்று விஷ்ணுவை பற்றியே அமைந்துள்ளது. பாருலகில் என்னும் பாடல் பாருலகில் படும் கஷ்டங்களை பற்றி புலம்புவதாக பாடியுள்ளார். மகாத்மா உதங்கர் எனும் படப் பாடலான காண ஆவல் கொண்டோங்கும் என்ற பாடலும் இடம்பெற்றுள்ளது.

### 3.2 மோஹன இராக லட்க்ஷணம்

ஆரோகணம் - ஸ ரி க ப த ஸ்

அவரோகணம் ஸ் த ப க ரி ஸ்

மோஹன இராகமானது 28 ஆம் மேளமாகிய ஹரிகாம்போஜியின் ஜன்யமாக இசையுலகில் வலம் வந்து கொண்டிருக்கிறது.

இந்து ஸ்வரங்களைக் கொண்டதால் இந்த இராகம் ஔடவராகமாகும்.

மோஹன இராகம் உபாங்க இராக வகையைச் சார்ந்தது.

**ஸ்வரஸ்தானங்களின் பெயர்கள்.**

ஷட்ஜம் (குரல்), சதுசுருதி ரிஷபம் (துத்தம்), அந்தர காந்தாரம் (கைக்கிளை), பஞ்சமம் (இளி), சதுசுருதிதைவதம் (விளரி).

**வர்ஜம்** : மத்தியமம் (உழை), நிஷாதம் (தாரம்)[1]

### 3.3. மோஹன இராகத்தின் தோற்றம் வளர்ச்சி

ஐந்திசைப் பண்களான முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றுள் முதல் பண்ணாக அமைந்துள்ள முல்லை பண்ணே மோஹன இராகமாகும்.[2] ஆனால் மோஹனம் என்னும் பெயர் மிக பிற்காலத்திலேயே சூட்டப்பட்டது.

*இளங்கோவடிகள் ஆய்ச்சியர் குரவையில் குறிப்பிட்டுள்ள* ***முல்லைத் தீம்பாணி*** *என்னும் பண் இக்காலத்தில் மோஹனம் என்ற பெயரால் வழங்கப்படும் முதல் ஐந்திசைப் பண்ணே ஆதல் வேண்டும் எனக் கோதண்டபாணிப் பிள்ளையவர்கள் பல்வேறு காரணங்கள் காட்டி முடிவு காண்கிறார். இக்கருத்தையே டாக்டர் எஸ்.இராமநாதன் அவர்களும், பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களும் குறிப்பிட்டுள்ளனர் என* ***'து.ஆ.தனபாண்டியன்'*** *என்னும் உரை ஆசிரியரால்* ***'நுண்ணலகுகளும் இராகங்களும்'*** *என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.*[3]

முல்லை தீம்பாணி என்பது முல்லைப் பண்ணாகும். செவ்வழியாழ்த் திறன்களில் ஒன்றாகவும் முல்லைப்பண் (மோஹனம்) விளங்குகிறது. தொல்காப்பியர் காலத்திற்கும், சங்க காலத்திற்கும் முன்னதாகவே தோன்றியதாக கூறப்படுகின்ற முல்லையாழ் என்பது, தற்போது வழக்கத்தில் உள்ள ஹரிகாம்போஜியே. புறநானூறும், ஐங்குறுநூறும் முல்லையாழின் சிறப்பைப் பற்றி கூறியுள்ளது என்றாலும், முல்லையாழ் (ஹரிகாம்போஜி) தோன்றுவதற்கு முன்னரே, ஐந்து ஸ்வரங்களைக் கொண்ட முல்லை தீம்பாணி (மோஹனம்) தோன்றி, அதிலிருந்தே ஏழு ஸ்வரம் கொண்ட முல்லையாழ் (ஹரிகாம்போஜி) தோன்றியுள்ளது என்பது உரையாசிரியர்களின் கருத்தாகும்[4]. தற்போது ஹரிகாம்போஜியின் ஜன்யமாக மோஹனம் காணப்பட்டாலும், முற்காலத்தில் முல்லைப்பண் என்னும் மோஹன இராகத்திலிருந்தே ஹரிகாம்போஜி (முல்லையாழ்) தோன்றியிருப்பது மோஹன இராகத்திற்குரிய தனி சிறப்பாகும்.

மோஹன இராகத்தினை ஹரிகாம்போஜியின் ஜன்யமாக 1735 ஆம் ஆண்டிற்குப் பிறகு வந்த ஷஹஜி மஹாராஜாவின் '**ராகாலக்ஷணம்**' துளஜா மஹாராஜாவின் '**ஸங்கீத ஸாராம்ருதம்**' போன்ற பல இசை இலக்கண நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். "18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் கிடைக்கப்பட்ட கோவிந்தரின் படைப்பான '**ஸங்க்ரஹ சூடாமணி**' என்ற நூலிலும் மோஹனம் ஹரிகாம்போஜியின் ஜன்யமாக கூறிப்பிடப்பட்டுள்ளது.[5]

திக்ஷிதரின் பரம்பரையில் தோன்றிய ஸுப்பராம திக்ஷிதர் அவருடைய **'ஸங்கீத ஸம்பரதாய ப்ரதர்சினி'** என்னும் நூலில் 65 – வது மேளமாகிய

கல்யாணியின் ஜன்மாகவும், வேறு சிலர் தீரசங்கராபரணத்தின் ஜன்யமாகவும் கூறுகின்றனர்.[6]

மேற்கூறியவாறு ஒவ்வொருவரும் அவர்களின் கருத்தைப் பதிவு செய்திருந்தாலும், மோஹன இராகமானது, ஹரிகாம்போஜியின் ஜன்யம் என்பதே பழக்கத்திலும் சரியான முறையானதாகவும் அமைந்திருக்கின்றது என்பது பலரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

### 3.4.பிற நாட்டில் மோஹனம்

தென்னிந்தியாவில் மோஹனம் என அழைக்கப்படும் இந்த இராகமானது வட இந்தியாவில் ஹிந்துஸ்தானி சங்கீதபாணியில் ‘‘பூப்” அல்லது ‘‘பூபாலி” என அழைக்கப்படுகிறது. சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து தான் மோஹனம் எனப் பெயர் வழக்கத்திலிருக்கின்றது. அதற்கு முன்னர் “ரேகுப்தி” என்ற பெயராலும் அழைக்கப்பட்டு வந்துள்ளது.[7]

உலக நாடுகள் முழுவதிலும் காணப்படும் இசை சாம்ராஜியத்தில் மோஹனம் முக்கிய ராகங்களுள் ஒன்றாகப் பார்க்கப்பட்டு வரும் நிலையில், சீனா நாட்டில் தெய்வத்தன்மை வாய்ந்ததாகவும், மிகவும் மரியாதைக்குரிய இராகமாகவும் மோஹனம் மதிக்கப்படுகின்றது. மேஹன இராகத்தில் உள்ள ஐந்து ஸ்வரங்களான ஸ ரி க ப த என்பதை ஐந்து பூதங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ ஆகியவற்றிற்கு ஒப்பிட்டு பார்க்கப்படுவதுடன் மட்டுமின்றி வழிவழியாக பின்பற்றியவரும் சடங்குகளிலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கட்டாயத்துடனும் இந்த இராகத்தைப் பயன்படுத்தப்படாத நிலையில் ஐம்பூதங்களின் தண்டனைக்கு உள்ளாவோம் என்பதும் அவர்களின் நம்பிக்கையாக இருந்த விடுகின்றது.

### 3.5 தமிழ் மொழியின் மோஹன கிரீடம்

மாணிக்கவாசகரின் ‘**திருவாசகமானது**’ முழுவதும் மோஹன இராகத்திலேயே பாடப்பட்டு வருகின்றது. பண்ணாராச்சி வித்தகராண குடந்தை ப. சுந்தரேசனார் **“திருமுருகாற்றுப்படை’’** முழுவதையும் ஓதல் போல பாடியுள்ளார். மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ் தாய் வாழ்த்து பாடலான “**நீராரும் கடலுடுத்த**’’ என்னும் பாடல் மோஹனத்தில் அமைந்திருப்பது மோஹன இராகத்திற்குரிய பெருமையாகும்.

### 3.6 மோஹன இராகத்தின் பண்பு மற்றும் சிறப்பு

மோஹன இராகத்தில் உள்ள ஸ்வரங்களின் கிரஹபேத வழியாக கிடைக்கப்படும் இராகங்களின் பட்டியல் கீழே காணலாம்,

| வ.எண். | கிரஹ ஸ்வரம் | கிடைக்கும் இராகம் |
|---|---|---|
| 1 | ரி | மத்தியமாவதி (22வது)[8] |
| 2 | க | ஹிந்தோளம் (20வது) [8] |
| 3 | ப | சுத்தஸாவேரி (29வது) [8] |
| 4 | த | உதயரவிச்சந்திரிக்கா (22வது) [8] |

- மோஹன இராகமானது நல்ல மங்களகரமான இராகம்
- மூர்ச்சனாகாரக இராகம்
- எல்லா சூழ்நிலையிலும், எல்லா காலத்திலும் பாடக் கூடியது
- அனைத்து ஸ்வரங்களுமே ஜீவ, நியாச ஸ்வரங்கள்[9]
- மகிழ்ச்சி, கோபம், வீரம் போன்ற உணர்ச்சிகளை வெளிபப்டுத்தக் கூடிய இராகம்
- எல்லா நிகழ்ச்சிகளிலும் தொடக்கத்தில் பாடுவதற்கு ஏற்ற இராகம்
- ஆலாபனை, தான, வர்ணணை போன்றவற்றிற்கு உகந்தவை.
- ஜண்டை,தாட்டுபோன்ற ஸ்வர ப்ரயோகங்களுக்கு ஏற்ற இராகம்
- எல்லா வாக்கேயக்காரர்களும் கச்சேரிகளுக்கும், உருப்படிப் பாடுவதற்கும் பயன்படுத்தக்கூடிய இராகம்
- கிருதி, கீர்த்தனை, வர்ணம், இராகமாலிகை, பஜனை போன்ற எல்லா வகை உருப்படிகள் பாடுவதற்கு ஏற்றஇராகம்
- நிருத்ய நாடகம், நாட்டிய நாடகம், ஹரிகதா,கதாகாலட்சேபம் போன்றவற்றிற்கு ஏற்ற இராகம்

### 3.7.த்ரயோதச லட்க்ஷணம்[10]

த்ர + தச = 3 + 10 = 13 லட்க்ஷணம்

தசம் என்றால் பத்து, த்ரயம் என்றால் முன்று. எனவே பதின்மூன்று லட்க்ஷணங்களை த்ரயோதச லட்க்ஷணம் என்கிறோம்.

கிரஹும், அம்சம், நியாசம், மந்தரம், தாரம், அல்பத்துவம், பகுத்துவம், அபன்யாசம், சந்யாசம், வந்யாசம், ஷாடவம், ஔடவம், அந்தர மார்க்கம் போன்றவைகளாகும்.

**கிரஹும்**

உருப்படியை ஆரம்பிக்கும் போது எடுக்கும் ஸ்வரம் கிரஹ ஸ்வரம்

**அம்சம்**

எந்த இராகம் எடுகின்றோமோ அந்த இராகத்திற்கு உயிரூட்டக்கூடிய, அழகினை தரக்கூடிய ஸ்வரமே ஜீவ ஸ்வரம் அல்லது அம்ச ஸ்வரமாகும்.

**நியாசம்**

கடைசியாக பாடும் ஸ்வரமே நியாசம் எனப்படும். ஒரு உருப்படியில் பல்லவியின் இறுதியிலும், அனுபல்லவியின் இறுதியிலும் மற்றும் சரணத்தின் இறுதியிலும் நியாசஸ்வரம் அமையும்

**மந்த்ரம்**

மத்தியஸ்தாயி ஸ்வரத்திற்கு கீழ்பாடும் ஸ்வரங்கள் மந்தர ஸ்வரமாகும்.

**தாரம்**

மத்தியஸ்தாயி ஸ்வரத்திறகு மேல்பாடும் ஸ்வரங்கள் தாரஸ்தாயி ஸ்வரமாகும்.

**அல்பத்துவம்**

ஒரு உருப்படியில் ஓரிரு முறையே (குறைவாக) பாடும் ஸ்வரம் அல்பத்துவம் ஆகும்.

**பகுத்துவம் -**

ஒரு உருப்படியில் அடிக்கடி (அதிகமாக) பாடும் ஸ்வரம் பகுத்துவமாகும்.

**அயன்யாசம்**

ஒரு இராகத்தை எடுத்து பாடும் பொழுது இடையிடையே முடியும் ஸ்வரம் அயன்யாசம் எனப்படும்.

**சன்யாசம்**

ஒரு இராகத்தை பல பாகங்களாக பிரித்து அதனை வகைப்படுத்தி பாடும் பொழுது அந்த பகுதியில் முடியும் ஸ்வரம் சன்யாசம்

**வந்யாசம்**

ஒரு இராகத்தை பல பாகங்களாக பிரித்துப்பாடும்பொழுது, அப்பாகங்களில் இராகத்தின் தன்மையை விளக்கும் வண்ணம் அடிக்கடிப் பாடப்படும் ஸ்வரம் வந்யாசமாகும்.

**ஷாடவம்**

ஆறு ஸ்வரங்கள் கொண்டு அமைக்கப்படுவது ஷாடவமாகும்.

**ஔடவம்**

ஐந்து ஸ்வரங்கள் கொண்டு பாடப்படுவது ஔடவமாகும்

**அந்தர மார்க்கம்**

எந்த இராகம் எடுக்கின்றோமோ அந்த இராகத்திற்கு சாயலைக் கொடுக்கக்கூடிய ஸ்வரம் அந்தர மார்க்கமாகும்.

**3.8 தசவித கமகம்**

மனித உடலுக்கு உயிர் (ஆத்மா) எப்படி முக்கியமோ, அது போல நமது கர்நாடக சங்கீதத்திற்க உயிரை கொடுக்கக்கூடியதாக அமைந்திருப்பது கமகமே. கமகம் இல்லாமல் பாடும் கர்நாடக சங்கீதமானது வாசனை இல்லா மலருக்கு சமமாகும்.

கமகம் என்பது ஒரு இராகத்தின் ஸ்வரங்களை, அதன் கால அளவிற்கு ஏற்றாற்போல், ஏற்ற இறக்கங்களுடனும் இராகபாவத்துடனும் பாடுவதே ஆகும்.

பத்துவித கமகங்கள்நமது கர்நாடக சங்கீதத்தில் கையாளப்படுகிறது. தசம் என்றால் பத்து விதம் என்றால் வகை எனவே தசம் (பத்து) + விதம் (வகை) + கமகம் = தசவிதகமகம் ஆகும்.

அவை ஆரோகண, அவரோகண, டாலு, ஸ்புரிதம், கம்பிதம், ஆஹத, பிரத்யாஹத, த்ரிபுச்ச, அந்தோள, மூர்ச்சனை என்பவைகளே.இவற்றின் விளக்கங்களை கீழே காணலாம்.

**ஆரோகண கமகம் :**

ஒரு இராகத்தின் ஸ்வரக் கோர்வையானது தொடங்கும் ஸ்வரத்திலிருந்து ஏறுவரிசையில் அமைந்திருக்குமானால் அவ்வகை கமகம் ஆரோகண கமகம் எனப்படும்.

உதா - ஸ ரி க ம ப த நி ஸ்

**அவரோகண கமகம்**

ஒரு இராகத்தின் ஸ்வரக் கோர்வையானது தொடங்கும் ஸ்வரத்திலிருந்து இறங்கு வரிசையில் இருக்குமானால் அவ்வகை கமகம் அவரோகண கமகம் எனப்படும்.

உதா -ஸ் நி த ப ம கரி ஸ

**டாலு கமகம்**

டாலு கமகம் என்பது தாட்டு ப்ரயோகமுறைப்படி பாடக்கூடிய கமகமாகும். இவ்வகை கமகமானது ஒரு ஸ்வரத்தை நிலையாக வைத்துக் கொண்டே மேல் ஸ்வரம் சென்று மீண்டும் ஸ்வரம் வந்து பாடும் முறையே ஆகும்.

உதா - ஸபா - ஸமா - ஸகா- ஸரீ

**ஸ்புரித கமகம்**

ஒரு ஸ்வரத்தை இரண்டு இரண்டாக பிடித்து பாடும் கமகம் ஸ்புரித கமகமாகும். இவ்வகை ஸ்வரங்கள் ஜண்டை வரிசை முறையில் அமைந்திருக்கும்.

உதா - ஸஸ ரரி கக மம

**கம்பித கமகம்**

ஒரு ஸ்வரத்திற்கு அசைவு கொடுத்து அழுத்தமாக பாடும் கமகம் கம்பித கமகமாகும்.

உதா - ஸ கா ம ப நீ ஸ - தன்யாசி

ஸ் நி தா ப ம கா ரிஸ - அடாணா

**ஆஹத கமகம்**

ஆரோகண கிரமத்தில் எடுத்துக் கொண்ட ஸ்வரத்தையும் அதற்கடுத்தாற்போல் உள்ள ஸ்வரத்தையும் பாடி, பின் இரண்டாவதாகப் பாடிய ஸ்வரத்தைப் பாடி, அதற்கடுத்த ஸ்வரத்தையும் பாடுவது ஆஹத கமகமாகும்.

உதா - ஸரி ரிக கம மப

**பிரத்யாஹத கமகம்**

அவரோகண கிரமத்தில் மேலிருந்து ஒரு ஸ்வரம் பிடித்து, அதற்கடுத்த ஸ்வரம் சென்று மீண்டும் அதே ஸ்வரத்திலிருந்து அதற்கடுத்த ஸ்வரம் பிடித்தும் பாடும் முறைக்கு பிரத்யாஹத கமகம் என்று பெயர்.

உதா - ஸ்நி நித தப பம

**த்ரிபுச்ச கமகம்**

மும்மூன்ற ஸ்வரமாக பிடித்து பாடும் கமகம் த்ரிபுச்ச கமகமாகும்.

உதா - ஸஸஸ ரிரிரி ககக

**ஆந்தோள கமகம்**

கீழே ஒரு ஸ்வரத்தை பிடித்து அதற்கடுத்த ஸ்வரம் சென்று மீண்டும் தொடக்கத்தில் பிடித்த ஸ்வரம் பாடி அதன்பின் அந்தஸ்வரத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு ஸ்வரம் தள்ளி, ஒரு ஸ்வரத்தையே முதலில் நெடிலாகவும் பின்பு குறிலாகவும் பிடித்து பாடும் முறைக்கு ஆந்தோள கமகமாகும்.

உதா - ஸரிஸ மாம ஸரிஸ பாப

**மூர்ச்சனை**

ஸ்வரக்கோர்வையினை மத்தியமகாலத்தில் பாடி, கடைசி ஸ்வரத்தை தீர்க்கமாக பிடித்து பாடும் முறைக்கு மூச்சனை கமகம் என்று பெயர்.

உதா. ஸரிகமபதநீரிகமபதநிஸா

### 3.9. ஸ்வராக்ஷரம்[12]

ஸ்வரம் + அக்ஷரம் - ஸ்வராக்ஷரம்

ஒரு கிருதியில் சாகித்திய எழுத்தும், சுர எழுத்தும் ஒன்றாக வருமானால் அதற்கு சுவராக்ஷரம் என்று பெயர்.

### 3.10. இராக சஞ்சரம்

மோஹன இராக உருப்படிகளில், மந்த்ர ஸ்தாபி, மர்யங்தாயி, தாரஸ்தாயி என்ற மூன்று ஸ்தாயிகளிலும் பாடல்ளின் சஞ்சாரம் அமைந்திருப்பது நோக்குதற்குரியது.

**எ.கா.பாடல் : காபாலி**

பல்லவியின் எடுப்பானது மத்தியஸ்தாயி காந்தாரத்தில் ஆரம்பித்து தாரஸ்தாயி காந்தாரம் வரையிலும், அனுபல்லவியின் எடுப்பானது மத்தியஸ்தாயி காந்தாரத்தில் ஆரம்பித்து நாரஸ்தாயி பஞ்சமம் வரையிலும், அதே போல் சரணத்தின் எடுப்பானது மத்தியஸ்தாயி காந்தாரத்தில் ஆரம்பித்து தாரஸ்தாயி பஞ்சமம் வரையிலும் நின்று இராகபாவம் தந்து பாடலுக்கு சுவையூட்டுகின்றது.

**பாடல் : நாராயண திவ்ய நாமம்**

பல்லவியின் எடுப்பானது மத்தியஸ்தாயி பஞ்சமத்தில் ஆரம்பித்து மந்த்ரஸ்தாயி தைவதத்தை தொட்டு தாரஸ்தாயி ரிஷபம் வரையிலும், அனுப்பல்லவியின் எடுப்பானது தாரஸ்தாயி ஷடஜமத்தில் ஆரம்பித்து தாரஸ்தாயி பஞ்சமம் வரையிலும், சரணத்தில் மத்தியஸ்தாயி காந்தாரத்தில் ஆரம்பித்து மந்த்ரஸ்தாயி தைவதம் தொட்டு தாரஸ்தாயி காந்தாரம் வரையிலும் நின்று இப்பாடலும் நல்ல சஞ்சார பாவம் தந்து சுவையூட்டுகிறது.

ஒரு பாடலின் அமைப்பானது மற்றொரு பாடலுக்கு அமையாமல் ஒவ்வொரு பாடலிலும் வேறுபட்ட இராக சஞ்சாரம் அமைந்திருப்பது பாடலுக்கு மேலும் ஆழகூட்டுகிறது.


### 3.11.மோஹன இராக உருப்படிகளின் இசை அமைப்பு

பாபநாசம் சிவனின் பாடல்களிலிருந்து ஆய்வாளரால் எடுக்கப்பட்டுள்ள மோஹன இராக உருப்படிகளின் அடிப்படை இசை அமைதியான த்ரயோதச லட்க்ஷணம், தசவித கமகம், ஸ்வராக்ஷரம் ஆகிய மூன்றையும் ஒவ்வொரு உருப்படிகளிலும் வரிசைப்படுத்தி பின்வருமாறு நோக்குவோம்.

3.11.1.பாடல் எண்-1

காபாலி - ஆதி

இசைக்குறியீடு[13]



[illegible]

1. தபப ப பப தப தப தத ப தத ரி | த ப தரி ஸதஸரி | த தபா ; ; ||
மதிபுனல் அரவு கொன்றை தும்பை அணிந்த | மங்கை பங்கா · சடை | யான் · · ||

2. " " | " | த பதஸ்பதப பா ; ||
" " | " | யா · · · · · · ன் ||

1. பதப தஸாஸ்ஸ்த ப பதஸ்தபபத | த பதரி ஸரிதப | த ரிஸா ;; ||
விதிதலை மாலை மார் · பன் · கரியின் · | வெம்புலி மின் தோ · லுடை | யான் · · ||

2. " ஸ்ரிக்ரிரிஸ் ஸ்தஸ்தப | " | " ||
" மா · · · லை · மா · · ர்ப | " | " ||

1. ஸ்தப தரி த பாதஸ் த பதப தரிஸஸ | *ஸரி தத தரி ரித பபபா | பாதஸ்பதபத ;; ||
அதிரமு ழங்கும் உடு · க்கையும் திரி சூ · லமும் | அங் · கியுங் கொ ராங் கழுமி | வங்கியுகையான ||

2. " பத த பதரிஸா ஸஸ " | " | " தஸ்தஸா ; ரி ||
" தி · ரி · சூ · · லமும் " | " | " கை · யான் · ||

3. க்ரிஸ் த ப தரி ஸ்தப " | ஸரிதரித ரிரித பபபா | தபதபத பபதஸா ; ||
அதிரமு ழங்குமுடுக்கையும் " | அங் · கியுங்கொ ராங் கழுமி | வங்கியுகையான் ||

தத பதஸ் ரி ஸ்ரி க்ப்க்ரிஸ் ஸ்ரிரிஸ் ஸ்த |
தும்பிமிதிதி தெ · ளி · முழுதும் தாம் · பல் · லூ · |

க் ரிஸ்த ரி · ஸ்தப | ஸ்த பததத பதரிஸத ||
வெங்கணதின் மங்கையர்ம | நாங்கவர் நாத · போ · தை · ||

*கிம்பாகதி

**த்ரயோதச லட்க்ஷணம்**

| | **பல்லவி** | **அனுபல்லவி** | **சரணம்** |
|---|---|---|---|
| கிரஹ ஸ்வரம் | க | க | க |
| அம்ச ஸ்வரம் | க,ப | க,ப | க, ப |
| நியாச ஸ்வரம் | த | த | த |
| தார ஸ்வரம் | க் | ப் | ப் |
| மந்த்ர ஸ்வரம் | த | - | த |
| ஔடவ ஸ்வரம் | ஸ ரி க ப த ஸ் | - | - |

**தசவித கமகம்**

ஆரோகண கமகம், ஸ்புரித கமகம், த்ரிபுச்ச கமகம் ஆகிய இம்மூன்றும் கமகங்கள் இப்பாடலில் கையாளப்பட்டுள்ளது.

**ஆரோகண கமகம்**

பல்லவியின் மூன்றாம் சங்கதியில் **காபாலி** என்னும் வார்த்தைக்கு இக்கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸ ரி க ப த ஸ்

**ஸ்புரித கமகம்**

i)பல்லவியில் **கருணை நிலவு பொழி** என்ற வார்த்தைக்குஇரண்டு சங்கதியிலும் ஸ்புரித கமகம் இடம் பெற்றுள்ளது

- ஸ்ஸ் தத பப கக த பப
- ரிரி ஸ்ஸ் தரி ஸ்ஸ் தத

ii) பல்லவியின் மூன்றாம் சங்கதியில் **வதநமதிய** என்னும் வார்த்தைக்கு இக்கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸ்ஸ் தத பப

iii) அனுபல்லவியில் **பாலரும் போற்றும்** என்ற வார்த்தைக்கு முதல் சங்கதியில் இக்கமகம் வந்துள்ளது

ஸஸ  தத பப ககா ரி

iv) சரணத்தின் அனைத்து சங்கதியிலும் **சாம்பல் துலங்கி** என்ற இடத்தில் ஸ்புரித கமகத்தை காணலாம்.

ஸஸ ரிரி ஸஸ

**த்ரிபுச்ச கமகம்**

i) அனுபல்லவியின் முதல் சங்கதியில் **பூபாலரும்** என்னும் வார்த்தைக்கு த்ரிபுச்ச கமகத்தை காணலாம்.

ஸ்ா, ஸ்ா,  ஸ்

ii) சரணத்தின் முதல் சங்கதியில் உள்ள **மாலைமார்** என்னும் இடத்தில் த்ரிபுச்ச கமகம் வந்துள்ளது

ஸ்ா, ஸ்  ஸ்

iii) சரணத்தின் முதல் சங்கதியில் **திரிசூலமும் அங்கியுங்குரங்குமுமி** என்ற வார்த்தைக்கு இக்கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸஸஸ ரி  ககக  பபபா

iv) சரணத்தின் சூலமும் என்ற வார்த்தைக்கு இரண்டாம் சங்கதியில் த்ரிபுச்ச கமகம் வந்துள்ளது.

ஸா ஸ ஸ

v) சரணத்தின் மூன்றாம் சங்கதியில் **ஜகந்மோஹன** என்ற இடத்தில் இக்கமகம இடம் பெற்றுள்ளது.

க  க  க

**ஸ்வராக்ஷரம்**


பல்லவி. அனுபல்லவி, சரணம் ஆகிய இம்மூன்று பாகங்களிலும் சுத்த ஸ்வராஷரமும், ஸுசிதஸ்வராக்ஷரமும் எவ்வாறு ஆசிரியர் கையாண்டுள்ளார் என்பதை காணலாம்.


| பாகம் | சுத்த ஸ்வராக்ஷரம் | ஸீசித ஸ்வராக்ஷரம் | சங்கதி (பாகம்) |
|---|---|---|---|
| பல்லவி | **கா**, க **பா**, க ரி, ஸா;<br>**கா,பா** லி,, | ஸ் த த ப **ப** க க<br>நி, ல வு **பொ**, ழி | முதல் |
| பல்லவி | **கா;பா** தா, ப க ரி, ஸா<br>**காபா** . . லீ . . | | இரண்டாம் |
| பல்லவி | | ரீ ஸ் த **ப** த<br>நி ல வு **பொ** ழி | மூன்றாம் |
| | **க்** ரீ ஸ்<br>**க** ரு ணை | க் **ரீ** ஸ்<br>க **ரு** ணை | |
| அனுபல்லவி | கா,**பா**, தா<br>ஆ **பா** ல | த ப த **தா**<br>அ ஷ் ட **திக்** | |
| | | ரி ஸ் ஸ் த த ப **ப** க<br>பா,ல . ரும்,**போ** | முதல் |
| சரணம் | **ப** ப த ஸ்<br>**பன** உ ரி த்த | க க **ப** ப ப<br>ம தி **பு** ன ல் | |
| | | ஸ **த** ப<br>அ **தி** ர | முதல் |
| சரணம் | | க ரி **க**<br>மு ழங் **கு** ம் | முதல் |
| | | ஸ ரி **கக கரி**<br>அ ங் **கி** யுங் **குர** ங் கு மு | |
| சரணம் | | ஸ ரி**க** ரிக ரி **ரி**<br>அங் . **கி** யுங் **கு** . ர | மூன்றாம் |

3.11.2 பாடல் எண் - 2

நாராயண திவ்ய நாமம் - ஆதி

இசைக்குறியீடு[14]





ஆசிரியரால் இப்பாடலில் பதிக்கப்பட்டுள்ள இசை அமைப்பு மற்றும் அடிப்படை அம்சங்களை கீழே காணலாம்.

**த்ரயோதசலட்க்ஷணம்**

| | பல்லவி | அனுபல்லவி | சரணம் |
|---|---|---|---|
| கிரஹ ஸ்வரம் | ப | ஸ் | க |
| அம்ச ஸ்வரம் | க,ப | க, ப | க, ப |
| நியாச ஸ்வரம் | க | க | க |
| மந்த்ர ஸ்வரம் | த | - | த |
| தார ஸ்வரம் | ப் | ப் | ப் |
| ஔடவ ஸ்வரம் | ஸ் த ப க ரி<br>ஸ் தா பா கரி | - | ஸ ரி க ப த<br>ஸ்ா த பா க ரி<br>ஸ்ா த பா கா ரி |

**தசவித கமகம்**

இப்பாடலில் ஆரோகண கமகம், அவரோகண கமகம், ஸ்புரித கமகம், த்ரிபுச்ச கமகம் ஆகியவை இடம்பெற்றுள்ளது.

**ஆரோகண கமகம்**

சரணத்தின் நான்காம் வரியில் **ப்ரேமையுடன்** என்ற வார்த்தைக்கு ஆரோகண கமகம் வந்துள்ளது.

ஸ ரி க ப த ரி

**அவரோகண கமகம்**

i) பல்லவியின் இரண்டாம் வரியில் **மறை சொல்லும்** என்னும் வார்த்தைக்கு அவரோகண கமகம் வந்துள்ளது.

ஸ் த ப க ரி

ii) பல்லவியின் இரண்டாம் வரியில் **நாவிற்கினிய** என்ற வார்த்தைக்கு இக்கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸ் தா பா க ரி க

iii) சரணத்தின் மூன்றாம் வரியில் உள்ள **ஸாகரத்தில் ஆழ்ந்து** என்ற வார்த்தைக்கு அவரோகணகமகம் வந்துள்ளது.

ஸ் த பா க ரி

iv) சரணத்தின் ஏழாம் வரியில் **கருணாலயன் அன்பர்** என்ற வாக்கியத்திற்கு அவரோகண கமகம் வந்துள்ளது.

ஸ்ா த பா கா ரி

**ஸ்புரித கமகம்**

i) பல்லவியின் மூன்றாம் வரியில் அமைந்துள்ள **திவ்ய நாமம்** என்ற வார்த்தைக்கு ஸ்புரித கமகம் அமைந்துள்ளது.

ஸஸா ரி க தத பப கா

ii) சரணத்தின் ஐந்தாம் அடியில் **பூரணன் திருமகள்** என்ற வார்த்தைக்கு இக்கமகம் வந்துள்ளது.

ஸ்ாஸ் பப தத பப

**த்ரிபுச்ச கமகம்**

i) பல்லவியின் இரண்டாம் வரியில் **நாமம்** என்ற இடத்தில் இக்கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸ்ா, ஸ்ா, ஸ்

ii) அனுபல்லவியில் **ஆறுவயதிலே** என்ற வார்த்தைக்கு இக்கமகம் வந்துள்ளது.

ஸ்ா, ஸ் ஸ்


**ஸ்வராக்ஷரம்**

| பாகம் | சுத்த ஸ்வராக்ஷரம் | ஸுசித ஸ்வராக்ஷரம் | வரிசை |
|---|---|---|---|
| அனுபல்லவி | | ; **பா** தா : **தரி** ஸ்<br>அன் **பு** செய் **த்ரு** வன் | இரண்டாம் வரிசை |
| | | பா த ப **த** ப கரி கா<br>மந் . . **தி**. . . ரம் | |
| சரணம் | த ப **கா** ரி<br>ஸ் ன **கா** தி | கா த பா **த**<br>நா ர தா **தி** | முதல் வரிசை |
| சரணம் | **க** ரி கா<br>**க** ட லில் | | ஐந்தாம் வரிசை |
| | த ப **தா**<br>வ ர **தன்** | | |
| சரணம் | ரி ஸ் **த**<br>பு னி **த** | க த ப **க** ரி<br>நீ ல மு **கி** ல் | ஆறாம் வரிசை |
| சரணம் | **க்** ரி ஸ் ரி கா ;<br>**க** ள மரு ள வொன் | ஸா **ரி**<br>மா **ர** | ஏழாம் வரி |

3.11.3. பாடல் எண்.3

மோஹன ச்ருங்கார– ஆதி

இசைக்குறியீடு[15]



பாடல் :- மோஹனை

தாளம் :- ஆதி

பல்லவி

கா பத ஸ்ரீக்ஸா ரி | ஸ்ரிஸ்த | ரிரிரி ரி ||
மோ ஹன ச்ருங்கா ர | மூர்·த்திராங் | கருங்குடி ||
தரிஸ்ரி ஸ்தஸ்ா பத | தரிஸா ரத | தப தப ||
ஆ · யிரம் மன்··முன் | எ···டா வ | தூா·மனை ||
do | ஸ்ரிஸ் ப | ரத ஸ்ரி ||
(மறுமா) மோ ஹன ச்ருங்கா ர | மூர் த்தி ப | சை புகிஸ் ||

அனுபல்லவி

(பஹுமா) க்பக்ரி ஸ் ஸதரிஸ் தபக | *பதரி ஸ்தப | தகப ஸாரி ||
வண்··ணன் கண்··ணன் முக | மதர் மது ஜொன்றும் | ஜாரத வைணர் || (மோஹனை)

சரணம்

(மறுமா) பா தஸ் பத ஸ்ரி | க்ா க்ா | ரதஸ்ரி ||
பா கன மொழி அமு | தா லே· | மது ர ||
பக்ரி ஸ்ரிஸ் ரதஸ் | ரிஸ்ரீ ரீ | ; பத ||
கித ழின் குழலின் கினை | யா·· லே | மனம் ||
பத ரிஸ் ஸ்பாத | ஸ்தபக | பா பா ||
பர வச மடைந்து | உலகை ம | றந்து ||
*பதரி ரிதஸ்ஸ்பாதத | ரிஸ்தபத | பா தப ||
பரமானந்தமடைந்துவி | டேன் · டாங்கும் | தார் ஜீவன் ||
கா பத ஸ்ரீ க்ா · ரி | ஸ்ரி ஸ்ா | ; ரரி ||
மோ ஹன ச்ருங்கா ர | மூர் · த்தி | மு ||
க்ா ரி தஸ் ரீ ஸ் பத | ஸ்ா ரதப | பததப ஸரிஸ்ரி ||
ரா ரி கம் ஸாரி பி · | தாம் பர | தா··ரீ··· || (மோஹனை)

— x — x

**த்ரயோதச லட்க்ஷணம்**

| | பல்லவி | அனுபல்லவி | சரணம் |
|---|---|---|---|
| கிரஹ ஸ்வரம் | க | க் | ப |
| அம்ச ஸ்வரம் | க,ப | க, ப | க, ப |
| நியாச ஸ்வரம் | ரி | ரி | ரி |
| தார ஸ்வரம் | ரி | ப் | ப் |

**தசவித கமகம்**

**ஆரோகண கமகம்**

i) பல்லவியின் தொடக்கத்தில் **மோஹனச்ருங்கார** என்ற வார்த்தைக்கு ஆரோகண கமகம் இடம் பெற்றுள்ளது.

கா ப த ஸ ரி கா

ii) சரணத்தின் முதல்வரியில் **மொழி அமுதலே** என்ற இடத்தில் ஆரோகண கமகம் வந்துள்ளது.

ப த ஸ் ரி க்ா க்ா

**அவரோகண கமகம்**

i)அனுபல்லவியில் **மது உண்ணும் ராதைக் கண்கள்** என்னும் இடத்தில் அவரோகண கமகம் வந்துள்ளது.

ரி ஸ் த ப க த ப க ரி

ii)சரணத்தின் கடைசி வரியான **பீதாம்பரதாரி** என்னும் வார்த்தைக்கு அவரோகண கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸ் த ப ப க த ப க ரி ஸ ரி

**ஸ்புரித கமகம்**

சரணத்தில் **பரமானந்தமடைந்து** என்ற வார்த்தைக்கு நான்காம் அடியில் ஸ்புரித கமகம் வந்துள்ளது.

ப த ரிரி த ஸ்ஸ் பதத

**ஸ்வராக்ஷரம்**

| **பாகம்** | **சுத்த ஸ்வராக்ஷரம்** | **ஸீசித ஸ்வராக்ஷரம்** | **வரிசை** |
|---|---|---|---|
| பல்லவி | ஸ் ரி ரி **கா** ரி<br>ச் ரு ங் **கா** ர | ஸ் **ரி** ரி கா **ரி**<br>ச் **ரு** ங் கா **ர** | · வரி |
| பல்லவி | ஸ் த ஸா ப **த**<br>மன் . . . ம **தா** | - | இரண்டாம் வரி |
| பல்லவி | **ப**, த ஸ் ரி<br>**ப**ச் சை மு கில் | - | மூன்றாம் வரி |
| அனுபல்லவி | ப **க**<br>மு **க** | - | முதல் வரி |
| | **கா** ரி<br>**க**ண் கள் | | |
| சரணம் | **பா** த ஸ்<br>**பா** க ன் | த ஸ **ரி**<br>ம து **ர** | முதல் வரி |
| சரணம் | **ப** த ரீஸ்<br>**ப** ர வர | ஸ் பா **த**<br>ம டைந் **து** | மூன்றாம் வரி |
| சரணம் | **ப** த ரி ரி த ஸ்<br>**ப** ர மா ன ந் த | ஸ் ப த **த**<br>ம டை ந் **து** | நான்காம் வரி |
| சரணம் | **ஸ்** ரி கா ரி<br>**ச்** ருங் கா ர | **ஸ்** ரி கா ரி<br>**ச்** ருங் கா ர | ஐந்தாம் வரி |
| சரணம் | ரி கா **ரி**<br>மு ரா **ரி** | | ஆறாம் வரி |

3.11.4 பாடல் எண் 4

ஸௌந்தர்ய– ஆதி

இசைக்குறியீடு[16]

---

பாடல் :- ஸௌந்தர்ய ஸௌந்தரனின்
ஆதி :- ஆதி

பல்லவி

கா , ரி , ஸ ரி , ஸா , த | ஸா , ஸ | ஸதரிஸ , தப த ||
ஸௌந்தர் ய ஸௌந்த ரி | னிஸ் னன் | ஞா · · · னம் ட ||

ஸ்ா தஸரி ஸரி | கா , ஸரி | கா ரிஸரி ||
பாங் கி லிருந்த அ ழைக் க · | தே · ஞயன் · ||

அனுபல்லவி

கா ப தா ரி ஸ்ா | த ரி ஸ் த | ஸ் பத தப ||
காந்த சக்தி யால் | வா · சி போ | · லவேல · ||

தரி ஸரி , ரிஸதா ப | ப தஸ்தா ப | பதநப கரிஸரி ||
ஜோ · டாக் கோ · ல | மா · · னா · க | பா · · வி · யான் ||

(ஸௌந்தர்ய)


சரணம்

கா நிபதா கா | தப கப | கரி ஸரி ||
மா லையும் ஞான் | மறையும் | நீத · ழக் · ||

கா , ரி , ஸரி ஸதப | த ஸா ரி | கா ஸரி கா ||
கா ஞ் த மவுரஜ | கிரண்ம | ணாழ · ஜிம் ||

கபா தரி ஸ்ா | த ரி ஸ் த | ப க ரி க ||
வெளிப் புவிக் கூனம் | ஆ · டைய | புஜிம் த வ ||

புதஸ்புதா , பகபாகா , ரி | ஸா ரி த | ஸா ; ||
ம · ணிமா லி தீப மா 8 | மார் ப ழ | ஜிம் ||


ஸா ப தா க பா | த ஸ் த ப | க ரி ஸ ரி ||
நீ ல கண் ட மும் | அருள் மழை | பொழி திரு ||

க ரி கபா பதப | கப தத | ஸ் ஸ் ஸா ||
நகை நிலா வீ , சும் | மதி முக | அ ழ கும் ||

பாத ஸ்ரிஸ் தஸ் | ரி பதரி | ஸ் த ப த ||
பால சந்த்ரன் அர | வு ந தி அ | ணி சடையும் ||

காப தாஸ் கப | தாரிஸ்த ப | கா , ரி ஸா ரி ||
ராம தாஸன் கிரு | கை ரிஸி | ரங் கண் ட |

(ஸௌந்தர்ய)

— x —

ஸௌந்தர்ய என்னும் பாடலில் அமைந்துள்ள த்ரயோதச லட்க்ஷணம், தசவிதகமகம் மற்றும் ஸ்வராக்ஷரத்தை கீழே நோக்குவோமாக.

**த்ரயோதச லட்சணம்**

| | பல்லவி | அனுபல்லவி | சரணம் |
|---|---|---|---|
| கிரஹ ஸ்வரம் | கா | கா | கா |
| அம்ச ஸ்வரம் | க, ப | க, ப | க, ப |
| நியாச ஸ்வரம் | ரி | ரி | ரி |
| மந்த்ர ஸ்வரம் | ப | ? | ப |
| தார ஸ்வரம் | ஸ் | ரி | க் |
| ஔடவ ஸ்வரம் | - | த ப க ரி ஸா | ஸ த ப க ரி ஸ<br>பா த ஸ் ரி க் |

**தசவித கமகம்**

ஆரோகண கமகம், அவரோகண கமகம், த்ரிபுச்ச கமகம் ஆகிய கமகங்கள் இப்பாடலில் இடம் பெற்றுள்ளது.

**ஆரோகண கமகம்**

i) அனுபல்லவியில் **காந்த சத்தியால்** என்னும் சாகித்தியத்திற்கு ஆரோகண கமகம் அமைந்துள்ளது.

கா ப தா ரி ஸ்ா

ii) சரணத்தில் **பால சந்திரன்** என்னும் வாக்கியத்திற்கு இக்கமகம் இடம் பெற்றுள்ளது.

பா த ஸ் ரி க

iii) சரணத்தின் இறுதி வரியில் வாக்கேயகாரரின் முத்திரையான**ராமதாஸன்** என்னும் சாகித்தியத்திற்கு ஆரோகண கமகம் வந்துள்ளது

கா ப தா ஸ்

**அவரோகண கமகம்**

i) அனுபல்லவியில் **காபாலியின்** என்ற வார்த்தைக்கு அவரோகண கமகம் அமைந்துள்ளது

த ப க ரி ஸா

ii) சரணத்தில் **அருள்மழை பொழி குரு** என்ற சாகித்தியத்திற்கு இக்கமகம் இடம்பெற்றுள்ளது.

ஸ் த ப க ரி ஸ

iii) சரண பாகத்தில் **கண் குளிர கண்ட** என்ற வார்த்தைக்கு அவரோகண கமகம் பயன்படுத்தப்பட்டுள்ளது,

ஸ் த ப கா,ரி ஸா ரி

iv) சரணத்தில் **காணாத மலரடி** என்னும் இடத்தில் இக்கமகம் அமைந்துள்ளது.

க், ரி, ஸ், ரி ஸ் தப

**த்ரிபுச்ச கமகம்**

i) **வெள்ளம் தனில் என் உள்ளம்** என்னும் வாக்கியத்திற்கு த்ரிபுச்ச கமகம் பல்லவி அமைந்துள்ளது.

ஸா, ஸஸ

ii) சரணத்தில் **அழகும்** என்னும் சாகித்தியத்திற்கு இக்கமகம் வந்து அழகைத் தருகின்றது

ஸ் ஸ் ஸ்ா


**ஸ்வராக்ஷரம்**


| **பாகம்** | **சுத்த ஸ்வராக்ஷரம்** | **ஸீசித ஸ்வராக்ஷரம்** | **வரிசை** |
|---|---|---|---|
| பல்லவி | ரீ,ஸ்ா,**த** ஸா<br>வெள் ளந் **த** னில் | - | முதல் வரி |
| அனுபல்லவி | **கா** ப<br>**காந்** த | | முதல் வரி |
| அனுபல்லவி | **பக** த ப க ரி ஸ ரி<br>**பா** . . . . லி . யின் | | இரண்டாம் வரி |
| சரணம் | **கா**, ரி, ஸ<br>**கா** ண த | கா ஸ ரி **கா**<br>ன ழ .**கும்** | இரண்டாம் வரி |
| சரணம் | **பா** த<br>**பா** ல | | ஏழாம் வரி |
| சரணம் | **தா** ஸ<br>**தா**ஸன் | | எட்டாம் வரி |

3.11.5பாடல் எண் 5

மயில் வாஹனா – ஆதி

இசைக்குறியீடு[17]





**த்ரயோதச லட்க்ஷணம**

.

| | பல்லவி | அனுபல்லவி | சரணம |
|---|---|---|---|
| கிரஹ ஸ்வரம் | த | ப | த |
| அம்ச ஸ்வரம் | க, ப | க, ப | க, ப |
| நியாச ஸ்வரம் | ரி | ப | த |
| தார ஸ்வரம் | க் | ப் | ப் |
| ஔடவ | ஸாரீகாபாதா | ஸதபகரி | ஸரிகபதஸ்<br>தபகரிஸ் |

**தசவித கமகம்**

**ஆரோகண கமகம்**

i)பல்லவியின் முதல் சங்கதியில் **மனமோஹனா** என்னும் சாகித்தியத்திற்கு ஆரோகண கமகம் அமைந்துள்ளது.

ஸா, ரி கா; பா தா

ii) பல்லவியில் **வா மா**என்னும் வார்த்தைக்கு இக்கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸ ரி க ப த ஸ் ரி க்

ஸா ரி கா ஸ் ரி க் பா

iii) அனுபல்லவியில் **கயிலாய முதல் மலைகளிலெல்லாம்** என்னும் வார்த்தைக்கு இரண்டாம் சங்கதியில் ஆரோகண கமகம் அமைந்துள்ளது.

ரி கா பா தா ஸ் ஸ் ரி க் ப்

iv) **பணிகுஹ** என்னும் சரணத்தின் இறுதியில் அமைந்துள்ள வார்த்தைக்கு இக்கமகம் அமைந்துள்ளது.

ஸா ரி க ப த ஸ்

**அவரோகண கமகம்**

i) அனுபல்லவியின்இரண்டாம் சங்கதியில் **முருகையா** என்னும் சாகித்தியத்திற்கு அவரோகண கமகம் அமைந்துள்ளது.

ஸ் த ப க ரி

ii) சரணத்தின் இரண்டாம் சங்கதியில் **அறுமுகா** என்னும் சாகித்தியத்திற்கு இக்கமகம் வந்துள்ளது.

த ப க ரி ஸா

**த்ரிபுச்ச கமகம்**

அனுபல்லவியின் முதலாம் சங்கதியில் **முதல்மலை** என்னும் வாக்கியத்திற்கு த்ரிபுச்ச கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸ், ஸ், ஸ்ா

**ஆந்தோள கமகம்**

பல்லவியின் மூன்றாம் சங்கதியில் **சரவணபவ வர மருள்** என்ற வார்த்தைக்கு ஆந்தோள கமகம் அமைக்கப்பட்டு இப்பாடலுக்கு அழகைத் தருகின்றது.

கா ப கா க. பா த ப பா தா ஸ் ததா


ஸ்வராக்ஷரம்

| பாகம் | சுத்த ஸ்வராக்ஷரம் | ஸூசித ஸ்வராக்ஷரம் | சங்கதி |
|---|---|---|---|
| பல்லவி | ஸா ரி<br>ச ர | ஸா ரி<br>ச ர | இரண்டாம் சங்கதி |
| பல்லவி | பா த ப பா<br>ப . .வ | | மூன்றாம் சங்கதி |
| அனுபல்லவி | ஸ்ா ரி க்ாரிஸ்ா ஸ்ா<br>ம லை க்ளிலெல் லாம் | தா பா தா<br>க ளித் து | முதல் சங்கதி |
| | பா தா ஸா ரி<br>பன் . னி ரு | பா தாஸ் ரிக் ரி ஸா<br>பன். னிருகை .யா | |
| | | தா ரி ஸ் தா பா தா<br>மு .ரு .கை . யா | |
| சரணம் | | பா தா ரி<br>பூ . ர்ண | இரண்டாம் சங்கதி |
| | | ப த ரி ஸ் த ப<br>போ . . லும் | |
| சரணம் | | ஸ்ா ரி க<br>பொ ரு ளெ | இரண்டாம் சங்கதி |
| | | கா பா<br>கு ஹ | முதல் சங்கதி |
| சரணம் | | க ப தா<br>கு . ஹ | இரண்டாம் சங்கதி |

3.11.6 பாடல் எண் 6.

துதிகையனை – ஆதி

இசைக்குறியீடு[18]



**த்ரயோதச லட்க்ஷணம்**

| | **பல்லவி** | **அனுபல்லவி** | **சரணம்** |
|---|---|---|---|
| கிரஹ ஸ்வரம் | க | த | த |
| அம்ச ஸ்வரம் | க, ப | க, ப | க.ப |
| நியாச ஸ்வரம் | ாி | ாி | ாி |
| மந்த்ர ஸ்வரம் | த | - | த |
| தார ஸ்வரம் | ஸ் | க் | ப் |
| ஔடவ ஸ்வரம் | | ஸாதாபகாாி | |

**ஆரேகண கமகம்**

i) சரணத்தின் இரண்டாம் அடியில் **சரவணன் ஸோதரனே** என்னும் இடத்தில் ஆரோகண கமகம் வந்துள்ளது

ஸ ரி க கா ப த ஸா

ii) சரணத்தின் மூன்றாம் அடியில் **அவனே** என்னும் இடத்தில் ஆரோகண கமகம் இடம் பெற்றுள்ளது.

த் ஸ் ரி கா

iii) சரணத்தின் நான்காம் அடியில் **ஜகமதிலும்** என்னும் வார்த்தைக்கு இக்கமகம் வந்துள்ளது.

ஸ் ரி க் ப்

**அவரோகண கமகம்**

i) பல்லவியின் இரண்டாம் அடியில் **ஆகமம் பணியும் உயர்** என்ற வார்த்தைக்கு இக்கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸ் தா பா கா ரி ஸா

ii)அனுபல்லவியில்**கதியருள்** என்ற வாக்கியத்திற்கு அவரோகண கமகம் அமைந்துள்ளது

ஸ் தா பா கா ரி

iii) சரணத்தின் நான்காம் அடியில் **முதல் தெய்வமான** என்னும் சாகித்தியத்திற்கு இவ்வகை கமகம் அமைந்துள்ளது.

ஸ் ஸா த ப கா ரி ஸா ரி

**த்ரிபுச்ச கமகம்**

i) அனுபல்லவியின் முதல் வரியில் **மாதவனாதி** தேவர் என்னும் வார்த்தைக்கு த்ரிபுச்ச கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸ்ா, ஸ்ா; ஸ்

ii) சரணத்தில் **நவநிதியும்** என்னும் இடத்தில் இக்கமகம் அமைந்துள்ளது.

ஸா, ஸா ஸ்

**ஸ்வராக்ஷரம்**


| **பாகம்** | **சுத்த ஸ்வராக்ஷரம்** | **ஸீசித ஸ்வராக்ஷரம்** | **சங்கதி** |
|---|---|---|---|
| பல்லவி | | க பா **க**ரி ஸா<br>து திக் **கை** ய னை | முதல் வரி |
| பல்லவி | த ரி ஸ்ா தா **பா**<br>க . . மம் **ப**ணி | ஸ **தா**<br>து **தி** | இரண்டாம் வரி |
| அனுபல்லவி | **ப** தா<br>**ப** ணி | | முதல் வரி |
| அனுபல்லவி | | ஸ்ா **தா**<br>க **தி** | முதல் வரி |

| | | | |
|---|---|---|---|
| சரணம் | பா ரி<br>ப சு | க ரீ<br>நி றை | இரண்டாம் வரி |
| சரணம் | ஸ ரி<br>ச ர | ப தா<br>சதி | முதல் வரி |
| சரணம் | தா தா<br>நிறைந் த | ஸ ரி<br>ச ர | இரண்டாம் வரி |
| சரணம் | | ப தா<br>எ தி | மூன்றாம் வரி |
| | | த ப கா ரி ஸா ரி<br>தெ ய் வ மா ன | நான்காம் வரி |

3.11.7 பாடல் எண் 7

**பாருலகில் ஆதி**

**இசைக்குறியீடு**[19]



**த்ரயோதச லட்க்ஷணம்**

| | | |
|---|---|---|
| கிரஹ ஸ்வரம் | - | ஸ் |
| அம்ச ஸ்வரம் | - | க, ப |
| நியாச ஸ்வரம் | - | ஸ் |
| தார ஸ்வரம் | - | ப் |

**தசவித கமகம்**

**ஆரோகண கமகம்**

i) இரண்டாம் அடியில் **சுமந்து வந்தேன்** என்னும் வார்த்தைக்கு இக்கமகம் அமைந்துள்ளது.

க ப தா; தா ஸ் ; ; ;

ii)மூன்றாம் அடியில் **காரிருள் மாயைக்கிடம்** என்னும் இடத்திற்கு ஆரோகண கமகம் அமைந்துள்ளது.

பா; தா ஸ் ரிரி ரிரி

**அவரோகண கமகம்**

முதல் வரியில் **பாருலகில் உழன்று** என்னும் சாகித்தியத்திற்கு அவரோகண கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸா, ஸ் தா பா க ப த ப க ரி ஸா

ஸ்வராக்ஷரம


.

| பாகம் | சுத்த ஸ்வராக்ஷரம் | ஸீசித ஸ்வராக்ஷரம் | சங்கதி |
|---|---|---|---|
| பல்லவி | | க ப த ப க ரி<br>உ .ழ ன் . று | முதல் வரி |
| பல்லவி | | த ப க ப தா<br>சு .மந் . தேன் | இரண்டாம் வரி |
| அனுபல்லவி | | ஸ்ா ரி க் ரி ஸ் தா<br>தந் . . . . . தேன் | மூன்றாம் வரி |
| அனுபல்லவி | க் பா க் ரி ஸா தா<br>க ம ல . ப தம் | க ப தா<br>அ லை ந் தேன் | நான்காம் வரி |

3.11.8பாடல் எண் 8.

காண ஆவல் கொண்டோங்கும்

இசைக்குறியீடு[20]



த , த , ப , க , | ப , , , ப , , , ||
கி ரி ருந்து கோனை டு

க , த , ப , த , க , ப , ரி , க , |
ஏ ம ய ம திந்து திரு

ஸ் , ரி , க , ப , | த ப த , த , , , ||
வ ழி மலர்க் கோனை டு

த ரி ஸ் த , , த ப த , , , க , ப , |
ஸ . நா அ வர் அகி

த , ரி ஸ் த ப க , | ப , , , ப , , , ||
கி ரி ருந்து கோணை டு

க த த ப த ஸ் த ப ப க த ப க ப க ரி |
ஏ ம ய ம திந்து திரு

ஸ ரி க ப த ஸ் ரி , | த , , , த , , , ||
வழி மலர்க் கோணை டு

, , ப த , ப த , ஸ் , , , ஸ் , ரி , |
விகம் விந மாம் புரிக்

க , த , ஸ் , ரி , | ஸ் த ரி ஸ த ப த , ||
து கி ணையில் பே ரின்ப

ரி , , , ஸ் , த , ப , , த ஸ் , ரி , |
வீ டு பெ று உ பூலும்

, , ப க , ப த , | ஸ் , , , ஸ் , ரி , ||
விதம் விந மாய் புரிந்

க் ப க் ரி ஸ் , ஸ் , ஸ் த ரி ஸ் த ப த , |
து கி ணையஸ் பே ரின்ப

க் க் ரி ரி ஸ் , ஸ் த | ப க ப க ப த ஸ் , ||
வீ டு பெ று உ தவும்

ரி க ரி ஸ த ஸ் த ப க ப த ப க ரி ஸ ரி |
மண வண் டட ணை

(காணா)

— x —

த்ரயோதச லட்க்ஷணம்

| | பல்லவி | அனுபல்லவி | சரணம் |
|---|---|---|---|
| கிரஹ ஸ்வரம் | க | ப | ஸ் |
| அம்ச ஸ்வரம் | க, ப | க, ப | க, ப |
| நியாச ஸ்வரம் | ரி | ரி | ரி |
| தார ஸ்வரம் | க் | க் | ப் |
| ஔடவ ஸ்வரம் | - | - | ஸ, ரி, க, ப, த<br>ஸ ரி க ப த ஸ் |

**தசவித கமகம்**

**ஆரோகண கமகம்**

சரணத்தில்**வடி மலர் தொண்டு** என்னும் சாகித்தியத்திற்கு இரண்டு சங்கதியிலும் ஆரோகண கமகம் இடம் பெற்றுள்ளது.

- ஸ ரி க ப த
- ஸ ரி க ப த ஸ்

**த்ரிபுச்ச கமகம்**

அனுபல்லவியின் தொடக்க வரியில் **மலர் மது** என்ற இடத்தில் இத்திரிபுச்ச கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸ், ஸ்,,ஸ்

**ஸ்புரித கமகம்**

i)அனுபல்லவியின் இரண்டாம் சங்கதியில் **மனமோஹமகல** என்னும் வார்த்தைக்கு ஸ்புரித கமகம் அமைந்துள்ளது.

ரிரி ஸ்ஸ் தத ப

ii) சரணத்தின் இரண்டாம் சங்கதியில் **பேரின்ப வீடு** என்ற இடத்தில் இக்கமகம் வந்துள்ளது.

க்க் ரி ரி ஸ்ஸ்


ஸ்வராக்ஷரம்

| பாகம் | சுத்த ஸ்வராக்ஷரம் | ஸூசித ஸ்வராக்ஷரம் | சங்கதி |
|---|---|---|---|
| பல்லவி | **க**,,, ப<br>**கா** ண | த,ப,ப க த ப **க**,<br>கொண்டே . ங் .**கும்**<br>க, பா,**த**, ரி, ஸ. த<br>அ வர் **திவ்** .... ய | முதல் சங்கதி |
| பல்லவி | **த** ஸ் த ப கப க<br>**த**.. ரிச னம் | | இரண்டாம் சங்கதி |
| அனுபல்லவி | **ப** க, ப த,<br>**பா**, னுதல் | | முதல் சங்கதி |
| | த, ரிஸ், தப,**த**<br>அ ட ங் கா **த** | | |
| சரணம் | ப,**க**பதப<br>ம**க** ல... | | இரண்டாம் சங்கதி |
| சரணம் | ஸ்,**த**,,, ப,<br>ஸ **தா** அ வர்<br>ப **த**,ப**த**,<br>வி **தம்** வி**த** | **த** ப த, த ,,,<br>**தொ**. ண் டு | முதல் சங்கதி |
| சரணம் | த ரி ஸ் **த**,, த ப<br>ஸ . . . **தா** அ | | இரண்டாம் சங்கதி |

3.11.9.பாடல் எண் 9

என்னை விட்டோடாதேடா – ஆதி

இசைக்குறியீடு[21]



பாடல் :- என்னை விட்டோடாதேடா

தாளம் :- ஆதி

பல்லவி

ஸ் , த ,   , , ப ,   ப த , த ப   க ப , , |
என்னை   விட்   போ டா   தே

த , , ,   , , , , | த ஸ் ரி , க ரி   ஸ , , , ||
டா   கண்   ணா

த ஸ் த ,   , , ப ,   ப , த ஸ் த ப   ப க ப , , |
என்னை   விட்   போ டா   தே

த , , ,   , , , , | , , , ,   , , , , ||
டா

க த ப க   ரி , க ,   ப , , ப   , , த , |
உன்னை   விட்   டால் எனக்   கென்

ஸ் ரி க் ,   ரி ஸ் ரி , | ஸ் த் ரி ஸ்   த ப த , ||
ண   ணு யிர்   வா   ழ்வே

(என்னை)

அனுபல்லவி

ரி க் , ஸ்   , , ரி ,   க் , , ,   த , ஸ் , |
கண் ணே   வா   டா   கட்டிக்

ரி க் , ரி   ஸ் த த ஸ் | ரி , , ,   , , , , ||
கரும்பே   . . . .   டா. . .   . . . .

த , , க்   ரி , ஸ் ,   த , ஸ் ,   ப , த , |
வாக நீ   தை ய   பெண்ணை   த ரு

ஸ் , , த   ரி , ஸ் | ரி , , ,   த ஸ் , த ||
வெண் நி   ரும்பிப்   பார். . .   வா

(என்னை)

சரணம்

க் , , ,   க் , , ,   ஸ் ; ரி ,   க் , ப் , |
என்   னால்   உன்   ஆடவர்

க் , , ,   ரி , ஸ் , | ரி , த ,   ஸ் , , , ||
ஒ   ட மு   டி யு   மோ

ஸ் , , ,   த , ஸ் ,   ப , த ,   ஸ் , ரி , |
உன்   இரு   மல   ரடி

க் , , ,   ரிஸ்ஸ் , | ரிக , ,   , , , , ||
நோ   கா   தோ

த , , க்   ரி , ஸ் ,   ஸ்த ரிஸ்   த ப த , |
உன்னை   ப் பி   டிப்பேன்   அங்கி

ரி , , ,   ரி , , , | த ஸ் த ,   த ஸ் த , ||
ருந்தில்   ருந்தில்   வா   வா

ஸ் , , த   , , ப ,   த , க ,   ப , த , |
இன்பங்   க   னி ம   ழ லி

ஸ் , , ,   ஸ் , , , | த ஸ் த ,   த ஸ் த , ||
சொல்   லொல்   வா   வா

(என்னை)

**த்ரயோதச லட்க்ஷணம்**

| | பல்லவி | அனுபல்லவி | சரணம் |
|---|---|---|---|
| கிரஹ ஸ்வரம் | ஸ் | ரி | க் |
| அம்ச ஸ்வரம் | க, ப | க, ப | க, ப |
| நியாச ஸ்வரம் | த | த | த |
| தார ஸ்வரம் | க் | க் | ப் |
| ஔடவ ஸ்வரம் | | | ஸ ரி க ப த ஸ்<br>ஸ, ரி, க, ப, த |

**தசவித கமகம்**

**ஆரோகண கமகம்**

i) அனுபல்லவியில் **கண்ணேவாடா கட்டி கரும்பே** என்னும் இடத்தில் ஆரோகண கமகம் அமைந்துள்ளது.

ஸ், ரி. க்,,, த, ல். ரி, க்

ii) சரணத்தின் **வடிமலர்** என்ற சாகித்திற்கு இக்கமகம் இடம் பெற்றுள்ளது

- ஸ ரி க ப த ஸ் - முதல் சங்கதி
- ஸ ரி க ப த ஸ் - இரண்டாம் சங்கதி

**ஸ்புரித கமகம்**

i) பல்லவியில் **விட்டோடாதேடா** என்னும்வார்த்தைக்கு ஸ்புரித கமகம் வந்துள்ளது

ப, ப த, த

ii) அனுபல்லவியில் **மோஹும்** என்ற சாகித்தியத்திற்கு அக்கமகம் இடம் பெற்றுள்ளது

ரிரி ஸ்ஸ் தத ப

iii) சரணத்தில் **வீடு** என்ற இடத்தில் ஸுபுரித கமகம் அமைந்துள்ளது

க்க் ரிரி ஸ்,ஸ்

**த்ரிபுச்ச கமகம்**

அனுபல்லவியில் **மலர்மது** என்ற வாக்கியத்திற்கு த்ரிபுச்ச கமகம் இடம் பெற்றுள்ளது.

ஸ், ஸ், ஸ்

**கம்பித கமகம்**

i) பல்லவியில் **என்னை விட்டோடாதேடா** என்ற இடத்தில் கம்பித கமகம் அமைந்துள்ளது.

ஸ், த, ப, ப, த, தப, கப, த,,,,,,

ii) அனுபல்லவியில் **வாடா** என்னும் வார்த்தைக்கு இக்கமகம் அமைந்தள்ளது

த ஸ் ரி ,,,,,,


**ஸ்வராக்ஷரம்**

| **பாகம்** | **சுத்த ஸ்வராக்ஷரம்** | **ஸீசித ஸ்வராக்ஷரம்** | **சங்கதி** |
|---|---|---|---|
| பல்லவி | | ப,,**த,**<br>எந் **தன்** | இரண்டாம் வரி |
| | | ஸ் ரி க் ரி ஸ் ரி<br>ஊ னு யிர் | |
| அனுபல்லவி | | க் ரி, ஸ்<br>நி **றை** ய | இரண்டாம் வரி |
| சரணம் | | **த**, ஸ்<br>**தி** ரு | இரண்டாம் வரி |

3.11.10பாடல் எண் 10

கிரிதர கோபாலா – ஆதி

இகைச்குறியீடு[22]



**த்ரயோதசலட்க்ஷணம்**

| | **பல்லவி** | **அனுபல்லவி** | **சரணம்** |
|---|---|---|---|
| கிரஹ ஸ்வரம் | ஸ் | ப | ப |
| அம்ச ஸ்வரம் | க, ப | க, ப | க, ப |
| நியாச ஸ்வரம் | ஸ் | ஸ் | ஸ் |
| தார ஸ்வரம் | க் | ப் | ப் |

**தசவித கமகம்**

**த்ரிபுச்ச கமகம்**

அனுபல்லவியில் **ஹார** என்னும் இடத்தில் த்ரிபுச்ச கமகம் அமைந்துள்ளது.

ரி,,,,,, ரி ரி

**ஸ்வராக்ஷரம்**

| **பாகம்** | **சுத்த ஸ்வராக்ஷரம்** | **ஸீசித ஸ்வராக்ஷரம்** | **சங்கதி** |
|---|---|---|---|
| பல்லவி | **த**ப<br>**த** ர | | |
| | **ப**, த த ஸ் ,,,<br>**பா** .. லா | | |
| அனுபல்லவி | | **க்**ரி, ஸ் ஸ்<br>**கௌ** ஸ் து ப | முதல் சங்கதி |
| | | ரி ,,,,,**ரி**<br>ஹா **ர** | |
| சரணம் | **ஸ்ரி**<br>**சரி** | **ப**த ஸ்<br>**ப்** ர போ | இரண்டாம் சங்கதி |

முடிவுரை

**“செய்வன திருந்த செய்”** என்ற கூற்றிற்கேற்ப ஒரு பாடலின் இசை எவ்வாறு அமைய வேண்டும் என்ற தெளிந்த அறிவோடு இசை இலக்கணம் பிறழாமல், இசையின் அழகை நேர்த்தியாக வடித்தெடுத்திருக்கும் பாபநாசம் சிவனின் இசைத்திறன் “**உள்ளங்கை நெல்லிக்கனி**” போல தெளிவாகத் தெரிகின்றது.

அடிக்குறிப்புகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பி.டி.செல்லத்துரை | தென்னக இசையியல் | முதற்பதிப்பு, 1984 | பக்.421 |
| 2. | து.ஆ.தனபாண்டியன் | நுண்ணலகுகளும் இராகங்களும | தமிழ்நாடு பல்கலைக்கழக வெளியீடு, 1988 | பக்.297 |
| 3. | மேலது | மேலது | மேலது | பக். 167 |
| 4. | வீ.ப.காசுந்தரனார் | பஞ்ச மரபு | | பக்.187 |
| 5. | எஸ்.ஆர்.ஜானகிராமன் | ராகலக்ஷணங்கள் | சென்னை சங்கீத வித்வத் சபை 1995 | பக்.110 |
| 6. | ருக்மணிரமணி | ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை | ருக்மணி, 1934 | பக். 258 |
| 7. | பி.டி.செல்லத்துரை | தென்னக இசையியல் | முதற்பதிப்பு, 1984 | பக்.421 |
| 8. | மேலது | மேலது | மேலது | பக். 421 |
| 9. | எஸ்.ஆர்.ஜானகிராமன் | ராகலக்ஷணங்கள் | சென்னை சங்கீத வித்வத்சபை, 1995 | பக். 112 |
| 10. | பொன்னையா பிள்ளை | இசை இயல் | 1944 | பக். 52,53 |
| 11. | இசைக்கலைமணி, வரலட்சுமி DMI | கர்நாடக சங்கீத மரபு | வரலட்சுமி, 1997 | பக். 77, 78, 79 |
| 12. | பி.டி.செல்லத்துரை | தென்னக இசையியல் | முதற்பதிப்பு, 1984 | பக். 92 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13. | ருக்மணிரமணி | ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை பாகம் - 1 | ருக்மணி, 1934 | பக். 217 |
| 14. | மேலது | பாகம் - 3 | | பக். 178 |
| 15. | மேலது | மேலது | | பக். 199 |
| 16. | மேலது | மேலது | | பக். 125 |
| 17. | மேலது | பாகம் - 4 | | பக். 47 |
| 18. | மேலது | பாகம் - 5 | | பக். 3 |
| 19. | மேலது | மேலது | | பக். 51 |
| 20. | மேலது | பாகம் - 6 | | பக். 38 |
| 21. | மேலது | மேலது | | பக். 75 |
| 22. | மேலது | பாகம் - 7 | | பக். 74 |

# இயல் - IV

## மோஹன இராக உருப்படிகளின் இயல் அமைதி

முன்னுரை

4.1 பிராசம்

4.2 வாக்கேயகாரர் முத்திரை

4.3 இராக முத்திரை

4.4 உவமை

4.5 மணிப்பிரவாளம்

4.6 மோஹன இராக உருப்படிகளின் இயல் அமைதி

4.6.1 காபாலி

4.6.2 நாராயண திவ்ய நாமம்

4.6.3 மோஹன ச்ருங்கார

4.6.4 ஸௌந்தர்ய

4.6.5 மயில்வாஹன

4.6.6 துதிகையனை

4.6.7 பாருலகில்

4.6.8 காண ஆவல் கொண்டோங்கும்

4.6.9 என்னை விட்டோடாதேடா

4.6.10 கிரிதர கோபாலா

முடிவுரை

# இயல் IV

## மோஹன இராக உருப்படிகளின் இயல் அமைதி

**முன்னுரை**

பொருள் பொதிந்த வார்த்தைகளை எடுத்துக் கோர்த்து, பாடலாக அமைப்பதே, உருப்படிகளின் இயல் அமைதியாகும். எவ்வாறு இசை அமைப்புக்கு இலக்கண விதி உள்ளதோ, அதேபோல இயல் அமைதிக்கென்றும் தனி இலக்கண சட்டத்திட்டங்கள் நம் முன்னோர்கள் வகுத்துச் சென்றுள்ளார்கள்.

**“மோஹன இராக உருப்படிகளின் இயல் அமைதி”** என்ற இந்த இயலில்

- பிராசகம்
- வாக்கேயகாரமுத்திரை
- இராக முத்திரை
- உவமை
- மணிப்பிரவாளம்

என்ற இலக்கண விதிமுறைகளை எவ்வாறு பாபநாசம் சிவன் பாடல் வரிகளில் அமைந்துள்ளது என்பதை விரிவாகக் காணலாம். சென்ற இயலிலேயே ஸ்வரதாள குறிப்புடன் பாடல் வரிகள் கொடுக்கப்பட்டிருப்பதால் இவ்வயலில் அவை மீண்டும் கொடுக்கப்படவில்லை.

### 4.1 பிராசம்[1]

ஒரு பாடலின் ஒவ்வொரு வரியிலும் ஒரு குறிப்பிட்ட வரைமுறையோடு ஏதேனும் ஒரு எழுத்து அல்லது எழுத்துக்கள் திரும்ப திரும்ப வந்து இனிமையை தருகின்றதோ அவற்றிற்கு **பிராசம்** எனப்படும்

- ஆதி பிராசம்
- த்விதியாக்ஷரபிராசம்
- அந்த்ய பிராசம்
- அனு பிராசம்

**ஆதி பிராசம்**

ஒரு பாடலின் முதல் எழுத்து ஒன்றி வருமானால் அவற்றிற்கு ஆதிபிராசம் என்று பெயர்.

**த்விதியக்ஷர பிராசம்**

ஒரு பாடலின் இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றி வருவது த்விதியக்ஷர பிராசம் என்பர்,

**அந்திய பிராசம்**

பாடலின் இறுதி எழுத்து ஒன்றி வருவது அந்திய பிராசம் எனப்படும்.

**அனுபிராசம்**

ஓர் எழுத்து அல்லது ஒரு வார்த்தை இடையிடையே அடிக்கடி வந்து அழகைத் தருவது அனுபிராசம் எனப்படும். இதனை இடையழகு என்று அழைப்பதுண்டு.

### 4.2 வாக்கேயகாரர் முத்திரை[2]

ஒரு பாடலை எழுதும் பாடலாசிரியரின் இயற்பெயர் அல்லது புனைப் பெயரை அப்பாடலில் உட்புகுத்தி வருமானால் அதற்கு வாக்கேயகாரர் முத்திரை என்று பெயர்.

### 4.3 இராக முத்திரை

ஒரு பாடலின் சாகித்தியத்தில் அப்பாடல் இயற்றப்பட்ட இராகத்தின் பெயர் வெளிப்படுமானால் அதற்கு இராகமுத்திரை என்று பெயர்.

### 4.4. உவமை

ஒரு பொருளை மற்றொரு பொருளுடன் ஒப்பிட்டுக் கூறுவது உவமையாகும்.

### 4.5 மணிப்பிரவாளம்

ஒரு மொழியோடு வேறு மொழி களப்புக்கு மணிப்பிரவாளம் என்று பெயர். பாபநாசம் சிவன், தமிழ் மொழியோடு சமஸ்கிருதத்தை சேர்த்து பொருள் மாறாமல் அழகுற வர்ணித்து அமைத்துள்ளார்.

**1.மயில்வாஹனா**

வாஹனம் ...... பல்லவி

பூர்ணச்சந்த்ரன் ...... சரணத்தின் முதல் வரி

குடி ...... சரணத்தின் இரண்டாம் வரி

**2.துதிக்கையனை**

ஸீத ...... சரணத்தின் இரண்டாம் வரி

ஸோதரனே ...... சரணத்தின் இரண்டாம் வரி

நவநிதியும் ...... சரணத்தின் மூன்றாம் வரி

ஜகமதிலும் ...... சரணத்தின் மூன்றாம் வரி

**3. ஸௌந்தர்ய**

ஸௌந்தர்ய ...... பல்லவியில் பாடலின் துவக்கம்

பிக்ஷாடன ...... அனுபல்லவியின்இரண்டாம் வரி

**4.6மோகன இராக உருப்படிகளின் இயல் அமைதி**

பாபநாசம் சிவன் பாடல்களிலிருந்து ஆய்வாளரால் ஆய்விற்கு தெரிந்தெடுக்கப்பட்டுள்ள மோஹன இராக உருப்படிகளின் இயல் அமைதியான பிராசம்; வாக்கேயகாரர் முத்திரை, இராகமுத்திரை, உவமை போன்றவற்றை ஒவ்வொரு உருப்படிகளிலும் வரிசைப்படுத்தி பின்வருமாறு ஆய்வாளரால் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

**4.6.1 பாடல் எண் - 1 காபாலி– ஆதி**[3]

**காபாலி - பிராசம்**

**ஆதி பிராசம்**

**ம**தி புனல் ................. சரணத்தின் முதல் வரி

**ம**த்தை ................. சரணத்தின் இரண்டாம் வரி

**அ**திர முழங்கும் ................. சரணத்தின் ஐந்தாம் வரி

அங்கியும் ................. சரணத்தின் ஆறாம் வரி

**த்விதியக்ஷர பிராசம்**

கபாலி ................. பல்லவியின் முதல் வரி

அபால ................. அனுபல்லவியின் முதல் வரி

பூபால ................. அனுபல்லவியின் இரண்டாம் வரி

மதிபுனல் ................. சரணத்தின் முதல் வரி

விதிதலை ................. சரணத்தின் மூன்றாம் வரி

அதிர ................. சரணத்தின் ஐந்தாம் வரி

துதிமிகு ................. சரணத்தின் ஏழாம் வரி

**அந்த்ய பிராசம்**

மாசடையா**ன்** ................. சரணத்தின் இரண்டாம் வரி

தோலுடையா**ன்** ................. சரணத்தின் நான்காம் வரி

கையா**ன்** ................. சரணத்தின் ஆறாம் வரி

**அனு பிராசம்**

ஆ **பா**ல கோ**பா**லம் ஆழ்சூழ் தலத்தவரும்

பூ**பா**லரும் அஷ்டதிக் **பா**லரும் போற்றும் அற்புத - அனுபல்லவி

**இராக முத்திரை**

உடல் முழுவதும் சாம்பல் பூசிக் கொண்டு எதிரே வரும் பெண்களின் மனம் கவர்ந்தவனாக நிற்கும் அழகை உடையவனே என்று சிவனை வர்ணிக்கும் இப்பாடலில் ஜகன் **மோகன** என்ற இராக முத்திரை சரணத்தின் இறுதி அடியில் உட்புகுத்தி பாடலை சிறப்புற அமைந்திருக்கிறார்.

**4.6.2பாடல் எண் - 2. நாராயண திவ்ய நாமம் - ஆதி**[4]

**பிராசம்**

**ஆதி பிராசம்**

**நா**ராயண ............. பல்லவியின் முதல் வரி

**நா**யக ............. பல்லவியின் இரண்டாம் வரி

**ஆ**ராவமுதாய் .............அனுபல்லவியின் முதல் வரி

**அ**ன்பு ............. அனுபல்லவியின் இரண்டாம் வரி

**த்விதியக்ஷரபிராசம்**

நாரதாதி ............. சரணத்தின் முதல் வரி

பேரனந்த ............. சரணத்தின் மூன்றாம் வரி

பூரணன் .............சரணத்தின் ஐந்தாம் வரி

மாரஜனகன் ............. சரணத்தின் ஏழாம் வரி

**அந்த்ய பிராசம்**

நாமம் ............. சரணத்தில் இரண்டாம் வரி

நாமம் ............. சரணத்தின் நான்காம் வரி

நாமம் ............. சரணத்தின் ஆறாம் வரி

நாமம் ............. சரணத்தின் எட்டாம் வரி

**அனுபிராசம்**

**நா**ராயண திவ்ய **நா**மம் **நா**ன்மறை சொல்லும்

**நா**யகன் த்ரு **நா**மம் **நா**விற்கினிய - பல்லவி

**நாமம்** ............. சரணத்தின் இரண்டாம் வரி

**நாமம்** ............. சரணத்தின் நான்காம் வரி

**நாமம்** ............. சரணத்தின் ஆறாம்வரி

**வாக்கேயகாரர் முத்திரை**

ராமதாஸன் கண்டுகொண்ட நாமம் என்று ஆசிரியர் **"ராமதாஸன்"** என்னும் தனது முத்திரையை பொருள் சிதையாமல் அமைத்திருப்பது போற்றுதலுக்குரியது.

சரணத்தின் இறுதி வரியான **'வணங்கும் ராமதாஸன் கண்டுகொண்டார்'** என்னும் வரியில் வாக்கேயகார முத்திரை இடம் பெற்றுள்ளது.

**4.6.3 பாடல் எண் 3. மோஹன ச்ருங்கார– ஆதி**[5]

**பிராசம்**

**ஆதி பிராசம்**

**பா**கன ............. சரணத்தின் முதல் வரி

**ப**ரவச ............. சரணத்தின் மூன்றாம்வரி

**ப**ரமானந்த ............. சரணத்தின் நான்காம்வரி

**த்வியக்ஷர பிராசம்**

பரவச ............. சரணத்தின் மூன்றாம் வரி

பரமானந்த ............. சரணத்தின் நான்காம் வரி

**அனு பிராசம்**

வ**ண்**ணன் க**ண்**ணன் முக

மலர் மதுவு**ண்ணு**ம் ராதை க**ண்**கள்

**அந்த்ய பிராசம்**

அமுதா**லே** ............. சரணத்தின் முதல்வரி

இசையா**லே** ............. சரணத்தின் இரண்டாம் வரி

**இராக முத்திரை**

மோஹன ச்ருங்கார என தொடங்கும் இப்பாடலுக்கு அழகை உடையவனே என்று பொருள் தந்து **மோஹன** என்ற இராக முத்திரையை உட்புகுத்தி இப்பாடலை அமைத்துள்ளார்.

**4.6.4.பாடல் எண் 4.ஸௌந்தர்ய – ஆதி**[6]

**பிராசம்**

**ஆதி பிராசகம்**

**மா**லயனும் ............. சரணத்தின் முதல் வரி

**ம**ணி மாலை ............. சரணத்தின் நான்காம் வரி

**த்விதியக்ஷர பிராசம்**

மாலயனும் ............. சரணத்தின் முதல்வரி

நீல கண்டனும் ............. சரணத்தின் ஐந்தாம் வரி

பால சந்திரன் ............. சரணத்தின் ஏழாம் வரி

**அந்த்ய பிராசகம்**

இரண்டினழகும் ............. சரணத்தின் இரண்டாம் வரி

ஆடையழகும் .............சரணத்தின் மூன்றாம் வரி

மார்பழகும் ............. சரணத்தின் நான்காம் வரி

மதிமுக அழகும் ............. சரணத்தின் ஆறாம் வரி

**அனுபிராசம்**

**மணிமாலைதலைமாலை** ............. சரணத்தின் நான்காம் வரி

இரண்டி**னழகும்** ............... சரணத்தின் இரண்டாம் வரி

ஆடைய**ழகும்** .............சரணத்தின் மூன்றாம் வரி

மார்ப**ழகும்** ............. சரணத்தின் நான்காம் வரி

மதிமுக **அழகும்** ............. சரணத்தின் ஆறாம் வரி

**வாக்கேயக்காரர் முத்திரை**

பாபநாசம் சிவனின் ராமதாஸன் என்னும் முத்திரையானது இப்பாடலில் சரணத்தின் இறுதி அடியில் **ராமதாஸன்** இரு கண்குளிரக் கண்ட என்று பாடியுள்ளார்.

**உவமை**

காந்த சக்தியால் ஊசிபோல - பி

க்ஷாடனக் கோலமான கபாலியின்

எப்படி ஒரு காந்தமானது ஊசியை ஈர்த்துக் கொள்ளும் சக்தியை உடையதோ அதே போல் கபாலியின் அழகால் ஈர்க்கப்பட்டு நிற்பதை எடுத்துரைக்கிறார். இங்கு காந்த சக்தியால் ஊசி போல என்பது உவமையாக பயன்படுத்தப்பட்டது.

**4.6.5 பாடல் எண் 5 மயில்வாஹன– ஆதி[7]**

**பிராசம்**

**த்விதியக்ஷரபிராசம்**

பூர்ண .............. சரணத்தின் முதல் வரி

பூரண .............. சரணத்தின் மூன்றாம் வரி

**அந்த்ய பிராசகம்**

மயில் வாஹ**னா** .............. பல்லவியின் முதல் வரி

மன மோஹ**னா** .............. பல்லவியின் இரண்டாம் வரி

**வாக்கேயக்காரர் முத்திரை**

மயில்வாஹனா என்று முருகனை வர்ணித்து பாடும் இப்பாடலில் சரணத்தின் இறுதியில் எனை ஆள வா வா வா **ராமதாஸன்** பணிகுஹ என பாடியுள்ளார்.

இவற்றில் ராமதாஸன் என்பது ஆசிரியரினின் முத்திரை.

**இராக முத்திரை**

மயிலை வாஹனமாக கொண்டவனே, வள்ளியின் மனம் கவர்ந்தவனே என புகழ்ந்து பாடும் இப்பாடலில் மோஹனா என்னும் வார்த்தை இராகமுத்திரையாக வந்து இன்னும் அழகூட்ட கூடியதாக அமைந்திருக்கிறது.

**'மயில் வாஹனா வள்ள மனமோஹனா'** இப்பாடல் வரியில் **மோஹனா** என்பது இராக முத்திரையாகும்.

**உவமை**

நிலவின் ஒளியை போல இவ்வுலகம் முழுவதும் நிறைந்திருப்பவனே என்று சந்திரனோடு முருகனை உவமைப்படுத்தி பாடியுள்ளார்.

பூரண சந்திரன் போலும் என்பது இப்பாடலில் அமைந்த உவமையாகும்.

**4.6.6 பாடல் எண் 6 துதிகையனை – ஆதி**[8]

**பிராசம்**

**த்விதியக்ஷரபிராசம்**

துதி ............. பல்லவியின் முதல் வரி

ஸ்ருதி ............. பல்லவியின் இரண்டாம் வரி

விதி ............. அனுபல்லவியின் மூன்றாம் வரி

பதி ............. அனுபல்லவியின் நான்காம் வரி

அதி ............. சரணத்தின் முதல்வரி

சதி ............. சரணத்தின் இரண்டாம் வரி

எதிலும் ............. சரணத்தின் மூன்றாம் வரி

மதிலும் ............. சரணத்தின் நான்காம் வரி

**அந்த்ய பிராசம்**

ஸோதர**னே** ............. சரணத்தின் இரண்டாம் வரி

அவ**னே**.............. சரணத்தின் மூன்றாம் வரி

**அனுபிராசம்**

**துதி**க்கையனை நீ **துதி** மனமே - பல்லவி

**விதி** மாதவனா**தி** தேவர் முனிவர் பணி

**பதி** அவனே நற்க**தி**யருள் வல்ல - அனுபல்லவி

அதிபதி பசுபதி அகம்நிறை கணப**தி**

சதி பார்வதி

எதிலும் நிறைந்த நவநிதியும்

மதிலும் - சரணம்

**4.6.7பாடல் எண் 7 - பாருலகில் - ஆதி**[9]

**பிராசம்**

**ஆதி பிராசம்**

**பா**ருலகில் ............. முதல் வரி

**பா**வவினை ............. இரண்டாம் வரி

**கா**ரிருள் ............. மூன்றாம் வரி

**க**மல ............. நான்காம் வரி

**க**ர்ப்ப ............. ஐந்தாம் வரி

**க**ர்ம ............. ஆறாம் வரி

**அ**ற்புத ............. ஏழாம் வரி

**அ**டிமை ............. எட்டாம் வரி

**த்விதியக்ஷரபிராசம்**

கர்ப்ப ............. ஐந்தாம் வரி

கர்ம ............. ஆறாம் வரி

**அந்த்ய பிராசம்**

நொந்**தேன்** ............. முதல் வரி

வந்**தேன்** ............. இரண்டாம் வரி

தந்**தேன்** ............. மூன்றாம் வரி

தாளேன் ............. ஐந்தாம் வரி

| | | |
|---|---|---|
| மீளேன் | ............. | ஆறாம் வரி |
| நாளும் | ............. | ஏழாம் வரி |
| ஆளும் | ............. | எட்டாம் வரி |

**அனுபிராகசாம்**

| | | |
|---|---|---|
| நொந்**தேன்** நொந்**தேன்** | ............. | முதல் வரி |
| சுமந்**தேன்** வந்**தேன்** | ............. | இரண்டாம் வரி |
| தந்**தேன்** தந்**தேன்** | ............. | மூன்றாம் வரி |
| மறந்தலைந்**தேன்** | ............. | நான்காம் வரி |
| இனித்தா**ளேன்** தா**ளேன்** | ............. | ஐந்தாம் வரி |
| **மீளேன் மீளேன்** | ............. | ஆறாம் வரி |
| நா**ளும்** நா**ளும்** | ............. | ஏழாம் வரி |
| **ஆளும்ஆளும்** | ............. | எட்டாம் வரி |

**4.6.8பாடல் எண் - 8 காண ஆவல் கொண்டோங்கும் - ஆதி**[10]

**பிராசம்**

**ஆதியக்ஷர பிராசம்**

| | | |
|---|---|---|
| **ஸ** தா | ............. | சரணத்தின் முதல் வரி |
| **ஸ** ம ய | ............. | சரணத்தின் இரண்டாம் வரி |
| **வி**தம் | ............. | சரணத்தின் மூன்றாம் வரி |
| **வீ**டு | ............. | சரணத்தின் நான்காம் வரி |

**அந்நிய பிராசம்**

| | | |
|---|---|---|
| கொண்டு | ............. | சரணத்தின் முதல் வரி |
| தொண்டு | ............. | சரணத்தின் இரண்டாம் வரி |

4.6.9 பாடல் எண் 9 என்னை விட்டோடாதேடா – ஆதி[11]

பிராசம்

ஆதிப்பிராசம்

| | | |
|---|---|---|
| **உ**ன் திரு | ............. | சரணத்தின் இரண்டாம் வரி |
| **உ**ன்னை | ............. | சரணத்தின் மூன்றாம் வரி |

த்விதியக்ஷர பிராசம்

| | | |
|---|---|---|
| என்னை | ............. | பல்லவியின் முதல் வரி |
| உ**ன்**னை | ............. | பல்லவியின் இரண்டாம் வரி |
| என்னால் | ............. | சரணத்தின் முதல் வரி |
| உ**ன்**திரு | ............. | சரணத்தின் இரண்டாம் வரி |
| உ**ன்**னை | ............. | சரணத்தின் மூன்றாம் வரி |
| இ**ன்**ப | ............. | சரணத்தின் நான்காம் வரி |

அனுபிராசம்

என்னை **விட்டோடாதேடா** என்னை **விட்டோடாதேடா**

உன்னை விட்டால் எந்த**ன்** ஊனுயிர் வாடுமே

4.6.10பாடல் எண் 10 கிரிதர கோபாலா– ஆதி[12]

பிராசம்

அந்த்ய பிராசம்

ஹார ............. அனுபல்லவியில் முதல் வரி

கார ............. சரணத்தின் முதல் வரி

ஹார ............. சரணத்தின் இரண்டாம் வரி

விதர ............. சரணத்தின் மூன்றாம் வரி

விஹர ............. சரணத்தின் நான்காம் வரி

**அனு பிராசம்**

ச்யாமள சரீர கௌஸ்துப ஹார

பிதாம்பர தர ப்ரபோ முராரே - அனுபல்லவி

நந்த ஸீகுமார மனமோஹன கார

ப்ருந்தாவன சர துலஸீ ஹார - சரணம் - 1

கிரிதர கோபாலா கம்ஸ விதார

மீரா மானஸ ஸரோ விஹர - சரணம் 2

**இராகமுத்திரை**

நந்த ஸீகுமார மன**<u>மோஹனா</u>** கார

ப்ருந்தாவன சர நுலஸீ ஹார

**'மனமோஹனா கார'** என்றால் கோபாலனின் மனம், தூய்மை நிறைந்தது, அழகுமிக்கது என்று பொருள் தரும் வண்ணம் இப்பாடலின் சரணத்தில் **<u>மோஹனா</u>** இராகமுத்திரையை பொதித்துள்ளார்.

**முடிவுரை**

**'எடுத்தோமோ கோர்தோமோ'** என்று இல்லாமல் வார்த்தைகள் ஒவ்வொன்றையும் கோர்த்திருக்கும் பாங்கு அளவிடற்கரியது. எதுகை, மோனை என்று இலக்கணப் பொருத்தத்துடன், இராக முத்திரை வாக்கேயக்காரமுத்திரை, உவமை ஆகியன பொருளோடு ஒன்றியிருப்பது பாடலை எளிதில் மனதில் பதிய வைக்கும் வண்ணம் அமைந்திருக்கிறது.

**அடிக்குறிப்புகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பி.டி.செல்லத்துரை | தென்னக இசையியல் | முதற்பதிப்பு, 1984 | பக். 94, 95 |
| 2. | மேலது | மேலது | மேலது | பக். 99 |
| 3. | ருக்மணிரமணி | ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை பாகம் - 1 | ருக்மணி, 1934 | பக். 217 |
| 4. | மேலது | பாகம் - 3 | | பக். 178 |
| 5. | மேலது | மேலது | | பக். 199 |
| 6. | மேலது | மேலது | | பக். 125 |
| 7. | மேலது | பாகம் - 4 | | பக். 47 |
| 8. | மேலது | பாகம் - 5 | | பக். 3 |
| 9. | மேலது | மேலது | | பக். 51 |
| 10. | மேலது | பாகம் - 6 | | பக். 38 |
| 11. | மேலது | மேலது | | பக். 75 |
| 12. | மேலது | பாகம் - 7 | | பக். 74 |

## முடிவுரை

**"எத்தனைக் கோடி இன்பம் வைத்தாய் - எங்கள் இறைவா"** என்று ஆச்சரியப்படும் அளவிற்கு பாபநாசம் சிவன் அவர்கள் எத்தனை விதப்பாடல்களை இயற்றி நமக்கு இன்பத்தைத் தந்துள்ளார் என்ற வியப்பு நம் மனதில் எழுவது உறுதி.

தேனில் தோய்த்தெடுத்த பலாச்சுவையை போல் மோஹன இராக இசை உருப்படிகளின் வரிகள் ஒவ்வொன்றும் இனிமைப் பயக்கும் இராகத்தோடு சேர்ந்து சுவைக்க சுவைக்க தித்திப்பூட்டுவதாகவே உள்ளது என்பது உறுதி.

ஒரு பாடலின் இராகமானது, மற்றொரு பாடலின் இராகச்சாயல் இல்லாமல் அமைந்திருப்பது, மோஹன இராகத்தின் பல வர்ண ஜாலங்களை பட்டைத்தீட்டி பறைசாற்றி உள்ளது என்பது உறுதி.

இயல் அழகு என்று நோக்கும் பொழுது இலக்கண அழகில் ஆதி பிராசம், த்வித்யக்ஷர பிராசம், அந்த்ய பிராசம், அனு பிராசம், உவமை என்பவையும், வார்த்தைகளில் பிறமொழிக்கலப்பாக அங்கங்கே அள்ளித்தெளித்தது போல் சமஸ்கிருத வார்த்தைகளும் மற்றும் வாக்கேயக்காரர் முத்திரை, இராக முத்திரை ஆகியன ஒன்றி பிணைந்திருப்பது பல்சுவை விருந்து என்பது உறுதி.

பலவண்ணங்கள் ஒன்றிணைந்து காணப்படும் வானவில்லானது, வானில் நின்று எவ்வளவு அழகைத் தருகின்றதோ, அவ்வாறு இசை அழகுகளான த்ரயோதச லட்க்ஷணம், தசவித கமகம், ஸ்வராக்ஷரம், இராகசஞ்சாரம் போன்றவை ஒன்றிணைந்து, மோஹன இராக உருப்படிகளுக்கு பல வண்ணங்கள் போல் அழகினை தந்து கேட்பவர்களின் மனதில் நின்று, செவிகளுக்கு இன்பத்தை தருவது உறுதி.

பாடல்கள் இயற்றுவது என்பது எளிதல்ல. பல நுணுக்கங்கள் உட்பொதிந்து அமைக்க வேண்டியது அவசியமாகிறது. அத்தனை அழகையையும் அள்ளி பருகும் போது அதன் சுவையே அலாதி என்பது உறுதி.

எவ்வாறு மோஹன இராக உருப்படிகள் ஆய்விற்கென எடுத்துக்கொள்ளப்பட்டதோ, அதேபோல் மேளஇராகம்,ஜன்யஇராகம் என்று தனித்தனியாக ஆய்வினை மேற்கொள்ளும்போது பல அரிய பொக்கிஷங்கள் கிடைக்கும் என்பது உறுதி.

# துணை நூற்பட்டியல்


## முதன்மை சான்றாதாரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ருக்மணி ரமணி | ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை, பாகம் -1 | ருக்மணி ரமணி 1934,[illegible] |
| 2. | ருக்மணி ரமணி | ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை,பாகம் -2 | ருக்மணி ரமணி 1980,[illegible] |
| | ருக்மணி ரமணி | ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை,பாகம் -3 | ருக்மணி ரமணி 1968,[illegible] |
| | ருக்மணி ரமணி | ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை, பாகம் -4 | ருக்மணி ரமணி 1973,[illegible] |
| | ருக்மணி ரமணி | ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை,பாகம் -5 | ருக்மணி ரமணி 1985,[illegible] |
| | ருக்மணி ரமணி | ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை, பாகம் -6 | ருக்மணி ரமணி 2000,[illegible] |
| | ருக்மணி ரமணி | ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனை மாலை, பாகம் -7 | ருக்மணி ரமணி [illegible] |

## துணை சான்றாதாரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பி.டி.செல்லத்துரை | தென்னக இசையியல் | வைக்கறைப்பதிப்பகம் தமிழ்நாடு – திண்டுக்கல் 4ஆம் பதிப்பு, 2000 |
| 2. | பாபநாசம் சிவன் | எனது நினைவு கடல் | ருக்மணி ரமணி, 1996, [illegible] |
| 3. | கே.ர.பக்கிரிசாமி | இந்திய இசைக்கருவூலம் | குசேலர் பதிப்பகம், 2006, [illegible] |

| | | | |
|---|---|---|---|
| 4. | து.ஆ.தனபாண்டியன் | நுண்ணலகுகளும், இராகங்களும் | தமிழ்நாடு பல்கலைக்கழக வெளியீடு, 1998 [illegible] |
| 5. | வி.ப.கா.சுந்தரனார் | பஞ்சமரபு | சென்னை |
| 7. | எஸ்.ஆர்.ஜானகிராமன் | ராகலக்ஷணங்கள் | சென்னை சங்கீத வித்வத் சபை, 1995 |
| 8. | இரா.கலைவாணி | தொல்காப்பியத்தில் இசை தொன்மையும் தொடர்ச்சியும் | முதல் பதிப்பு – 2014 [illegible] |
| 9. | பொன்னையா பிள்ளை | இசை இயல் | 1944, சென்னை |
| 10. | இசைக்கலைமணி வரலட்சுமி | கர்நாடக சங்கீத மரபு | வரலட்சுமி, 1997, [illegible] |
| 11. | அம்பிகா | இசையியல் | மணிமேகலை பிரசுரம், 1997, [illegible] |
| 12. | இரா.ம.கௌசல்யா | தமிழிசை ஓர் ஆய்வு | மீனாம்பிகா ஶ்ரீ பதிப்பகம், 2007, [illegible] |


**ஆங்கில புத்தகங்கள்**


| | | | |
|---|---|---|---|
| 1. | Radhakrishnan | Srippanasan Sivan Contribution as a Composer | Department of Music,Avinashilingam university-Coimbatore |
| 2. | Hema Ramanathan | Ragalaksana sangraha | N.Ramathan, 2004,Chennai |
| 3. | Nitu Sinha | Music in 20th Century | ABD publisher, 2013,Jaipur |
| 4. | M.B.Vedavalli | Raga which Emerged during the post Trinity period and the Lakshana | M.B.Vedavalli,2008,Chennai |
| 5. | Nookala Chinna Sathyanaranyanan | Raga of Indian Music | Sri Dattusai Graphics, 2004,Hyderabad |
| 6. | B.Dayananda | Carnatic Music Composer | The Triveni Foundation 1993,Chennai |

| | | | |
|---|---|---|---|
| 7. | A.Y.Bagirathi | Sri Papanasam Sivan Contribution as a composer | Department of Music and Department of Engineering 2017, avinashilingam university, Coimbatore |
| 8. | Sambamoorthy | South Indian music book ,bookIII | The Indian Publishing house 8th edition, 1983, chennai |
| 9. | Sambamoorthy | South Indian music book ,bookV | The Indian Publishing house 4th edition, 1982, Chennai |
| 10. | P.G.Padma Gowri and K.Kanakavalli | Sri papanasam sivan contribution as a composer | Department of Music and Department of Civil Engineering, 2017, avinashilingam university, Coimbatore |

| | | | |
|---|---|---|---|
| 8. | Sambamoorthi | South Indian Music Book, Book – III | The Indian Publishing House, 8th Edition, 1983, Chennai |
| 9. | Sambamoorthi | South Indian Music Book, Book – V | The Indian Publishing House, 4th Edition, 1982 Chennai |
| 10. | P.G.Padma Gowri and K.Kanakavalli | Sri Papanasam Sivan contribution as a composer | Department of Music and Department of Civil Engineering, 2017, avinashilingam university, Coimbatore |



பாபநாசம்சிவன்



பாபநாசம்சிவன் மற்றும்

துணைவியார் யோகாம்பாள்